இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 121 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – கார்த்திகை 25 – திங்கள்கிழமை 11 டிசம்பர் 2023 – கோவை ★ ★ 8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 121: Thiruvalluvar Year - 2054 - Karthigai 25 - Monday 11 December 2023 - Kovai ★ ★ 8 Pages ₹ 5.00

## புயல் - வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு

# 6 ஆயிரம் ரூபாய் நிவாரண உதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு !

**சென்னை, டிச. 11-**

**“மிக்ஜாம்” புயல் வெள்ளத்தால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவியாக ரூபாய் 6 ஆயிரம் ரொக்கமாக வழங்கப்படும்!” என்றும் “இதர நிவாரண உதவித் தொகைகளும் உயர்த்தி வழங்கப்படும்!” என்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

இது தொடர்பான, அரசின் செய்திக் குறிப்பு வருமாறு:-

தமிழ்நாட்டில் டிசம்பர் 3 மற்றும் 4 ஆம் தேதிகளில் வீசிய “மிக்ஜாம்” புயல் காரணமாக சென்னை மாவட்டத்தில் கடுமையான மழைப்பொழிவு ஏற்பட்டது. மேலும், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் குறிப்பிட்ட சில பகுதிகளிலும் வரலாறு காணாத மழைப்பொழிவு ஏற்பட்டு, கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டன.

முன்னதாக, “மிக்ஜாம்” புயலின் தாக்கம் குறித்து இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட அறிக்கைகளின் அடிப்படையில், தமிழ்நாடு அரசு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்திருந்தது. முதலமைச்சர் அவர்கள் தலைமையில் இதுகுறித்து கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டும், ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப் பட்டிருந்தன.

### களத்தில் 20 அமைச்சர்கள்!

மீட்புப் பணிகளை மேற்கொள்வதற்கு முன்னதாகவே திட்டமிடப்பட்டு, தேசிய பேரிடர் மீட்புப் படை, மாநில பேரிடர் மீட்புப் படை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை ஆகிய துறைகளைச் சார்ந்த மீட்புப் படையினர் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர். மீட்புப் பணிகளுக்குத் தேவையான டீசல் மோட்டார் பம்புசெட்டுகளும், படகுகளும், ஜே.சி.பி. இயந்திரங்களும், மரம் அறுக்கும் கருவிகளும் சென்னை மாநகராட்சியின் மண்டல அலுவலகங்களில் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன. இவை புயல் மழையின் தாக்கத்திற்குப் பிறகு உடனடியாக களத்தில் மீட்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டன.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (9.12.2023) தலைமைச் செயலகத்தில், மிக்ஜாம் புயலால் ஏற்பட்ட வரலாறு காணாத பெருமழையின் காரணமாக சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்தும், மறுசீரமைப்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்தும் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், அமைச்சர்கள் துரைமுருகன், கே.என்.நேரு, கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கே.பிரபாகர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே.கோபால், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை செயலாளர் வி.ராஜாராமன், பேரிடர் மேலாண்மை இயக்குநர் எஸ்.ஏ.ராமன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### இரவு பகல் பாராமல் களத்தில் பணியாளர்கள்!

மேலும், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளைத் தீவிரப்படுத்துவதற்காக 20 அமைச்சர் பெருமக்களும், 50க்கும் மேற்பட்ட இந்திய ஆட்சிப் பணி மற்றும் இந்திய காவல் பணி அலுவலர்களும் நியமிக்கப்பட்டு, நிவாரணப் பணிகள் முடுக்கி விடப்பட்டன.

இதுமட்டுமின்றி, 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மின் வாரியப் பணியாளர்களும், 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மருத்துவப் பணியாளர்களும், ஆயிரக்கணக்கான தூய்மைப் பணியாளர்களும் இந்த மாபெரும் பணியில் இரவு, பகல் பாராமல் ஈடுபட்டனர். மழையினால் பாதிக்கப்பட்ட நான்கு மாவட்டங்களில், மக்களை மீட்க சுமார் 740 படகுகள் பயன்படுத்தப்பட்டன. இதன்மூலம், 26 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வெள்ளப் பகுதிகளிலிருந்து பாதுகாப்பான பகுதிகளுக்கு அழைத்துச் செல்லப் பட்டார்கள்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு உணவு வழங்கும் பணிக்கென தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, பெரிய அளவில் சமையல் அறைகள் நிறுவப்பட்டு, தரமான உணவு சமைக்கப்பட்டு, சென்னை மாவட்டத்தில் மட்டும் 8.12.2023 வரை, மூன்று வேளை உணவாக, மொத்தம் 47 இலட்சம் உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளன. மொத்தமாக சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய 4 மாவட்டங்களில் இதுவரை 51 இலட்சத்திற்கும் மேற்பட்ட உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உணவு, குடிநீர், பால் ஆகிய பொருட்கள் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலம் பெறப்பட்டு, முறையாக வழங்கப்பட்டு வருகின்றன.

அவற்றின் விவரம் பின்வருமாறு:-

1. பால் பவுடர் - 58,222 கிலோ
2. குடிநீர் பாட்டில்கள் - 9,67,000 எண்ணிக்கை
3. பிரட் பாக்கெட் - 2,65,000 எண்ணிக்கை
4. பிஸ்கட் பாக்கெட் - 10,38,175 எண்ணிக்கை

### 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தூய்மைப் பணியாளர்கள்!

வெள்ளம் பாதித்த பகுதிகளில் மழை நீர் தற்போது வடிந்துள்ள நிலையில், அந்தப் பகுதிகளில் தற்போது 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தூய்மைப் பணியாளர்களை ஈடுபடுத்தி, பேரிடர் மீட்புக் குழுவினரின் உதவியுடன் போர்க்கால அடிப்படையில் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், மருத்துவ முகாம்களும் தேவையான இடங்களில் நடத்தப்பட்டு வருகின்றன.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

### நியாயவிலைக் கடைகள் மூலம் வழங்கல்!

**மிக்ஜாம் புயலால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத் தொகையாக ரூபாய் 6 ஆயிரம் வழங்கிட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். இந்த நிவாரணத் தொகையினை, பாதிக்கப்பட்டவர்கள் குடியிருக்கும் பகுதிகளில் உள்ள நியாய விலைக் கடைகளின் மூலம் ரொக்கமாக வழங்கிட முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.**

## அரசின் தீவிர நடவடிக்கையால் மழை நீர் அகற்றம்!

# சென்னை மாநகரம் இயல்பு நிலைக்குத் திரும்பியது!

## மக்கள் வழக்கமான பணிகளை மேற்கொள்ளத் தொடங்கினர் !

**சென்னை, டிச. 11 -**

**மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட சென்னை மடிப்பாக்கம், பள்ளிக்கரணை பகுதிகளில் வெள்ள நீர் வடிந்து இயல்பு நிலை திரும்பி வருவதாக ‘டெக்கான் கிரானிக்கல்’ நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.**

சென்னையில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இயல்பு நிலை திரும்ப, தமிழ்நாடு அரசு போர்க்கால அடிப்படையில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொண்டது. இதன் காரணமாக ஓரிரு நாளிலேயே பெரும்பாலான இடங்களில் இயல்பு நிலை திரும்பிவிட்டது.

இந்நிலையில், மிக்ஜாம் புயலால் பெரிதும் பாதிக்கப்பட்ட மடிப்பாக்கம், பள்ளிக்கரணை பகுதிகளிலும் வெள்ள நீர் வடிந்து இயல்பு நிலை திரும்பி வருவதாக ‘டெக்கான் கிரானிக்கல்’ நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

பள்ளிக்கரணை, மடிப்பாக்கம் பகுதிகளில் பல்வேறு இடங்களில் மக்கள் தங்களது வழக்கமான பணிகளை மேற்கொள்ளத் தொடங்கி விட்டதாக ‘டெக்கான் கிரானிக்கல்’ ஆங்கில நாளேடு குறிப்பிட்டுள்ளது.

கனமழை மற்றும் மிக்ஜாம் புயலின் காரணமாக பெருங்குடி மண்டலம் 190வது வார்டுக்கு உட்பட்ட, துலுக்காணத்தம்மன் கோயில் தெரு மற்றும் சாய் பாலாஜி நகர், ஆலந்தூர் மண்டலத்திற்குட்பட்ட மணப்பாக்கம் ரிவர்வியூ காலனி, 156வது வார்டுக்குட்பட்ட திருவள்ளுவர் நகர், வளசரவாக்கம் மண்டலம் 151வது வார்டுக்கு உட்பட்ட சுப்பிரமணி சாமி நகர், 152வது வார்டுக்கு உட்பட்ட, அம்பேத்கர் சாலை ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரண பணிகள் மற்றும் மீட்பு பணிகளை, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அமைச்சர் கே.என்.நேரு நேற்று முன்தினம் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், துலுக்காணத்தம்மன் கோயில் தெரு மற்றும் சாய்பாலாஜி நகரில் கனமழை மற்றும் மிக்ஜாம் புயலினால் பாதிக்கப்பட்ட 1000 பேருக்கு பாய், பிஸ்கெட் மற்றும் ரொட்டி பாக்கெட்டுகள், குடிநீர் பாட்டில்கள் உள்ளிட்ட உணவுப்பொருட்களையும் வழங்கினார்.

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 65 நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள 14,268 பேருக்கு காலை உணவு வழங்கப்பட்டுள்ளது. வெள்ளம் பாதித்த பகுதிகளில் வாகனங்களின் மூலம் 47,79,222 உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மாநகராட்சி சார்பில் 1,04,290 ரொட்டி பாக்கெட்டுகள், 7,01,941 குடிநீர் பாட்டில்கள், 8,47,633 பிஸ்கெட் பாக்கெட்டுகள், 51,733 பால் பவுடர் பாக்கெட்டுகள், 14,574 பால் பாக்கெட்டுகள். 61,380 கிலோ அரிசி மற்றும் 1,739 கிலோ பருப்பு உள்ளிட்ட உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது. மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 1,512 மரங்கள் விழுந்துள்ளன. அவற்றில் 1,303 மரங்கள் அகற்றப்பட்டுள்ளன. மீதமுள்ள 209 மரங்களை அகற்றும் பணிகள் நடைபெற்று வருகிறது.

சென்னையில் 22 சுரங்கப் பாதைகளும் தற்போது மழைநீர் தேக்கமின்றி போக்குவரத்திற்கு பயன்பாட்டில் உள்ளது. சென்னை மாநகராட்சியில் 1,162 மோட்டார் பம்புகள் மழைநீர் வெளியேற்றுவதற்காக தயார் நிலையில் உள்ளது. சென்னையில் மழைநீர் தேங்கியிருந்த 363 இடங்களில் மோட்டார் பம்புகள் மூலம் 306 இடங்களில் தேங்கியுள்ள மழைநீர் வெளியேற்றப்பட்டுள்ளது.

மீதமுள்ள 57 இடங்களில் மழை நீர் வெளியேற்றும் பணிகள் நடைபெற்று வருகிறது. சென்னை மாநகராட்சியின் 488 பேருந்து தடசாலைகளில் இடங்களில் மட்டும் மழைநீர்த் தேக்கம் காணப்பட்டது. இவற்றில் 57 இடங்களில் மழைநீர் வெளியேற்றப் பட்டுள்ளது. மீதமுள்ள 5 இடங்களில் மழைநீர் வெளியேற்றும் பணி துரிதமாக மேற்கொளளப்பட்டு வருகிறது.

சென்னை குடிநீர் வழங்கல் வாரியம் மூலமாக மழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நாள்தோறும் குடிநீரானது லாரிகளில் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

கடந்த 7ம் தேதி 4,227 நடைகளில் 444 லாரிகள் மூலமும் நேற்று முன்தினம் 4284 நடைகளில் 474 லாரிகள் மூலமும் குடிநீர் விநியோ கிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் குடிநீர் வாரியத்தின் மூலம் 333 தெருக்களில் கழிவுநீர் மற்றும் மழைநீர், 160 கழிவுநீர் வாகனங்கள் மூலம் 2,072 நடைகளில் அகற்றப்பட்டுள்ளது.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (9.12.2023) தலைமைச் செயலகத்தில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன் அவர்கள் சந்தித்து, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களின் ஒரு மாத சம்பளத் தொகையான 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு வழங்கினார். உடன் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.எஸ்.பாலாஜி, எம்.பாபு மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (9.12.2023) தலைமைச் செயலகத்தில், அசோக் லேலண்ட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் முதன்மைச் செயல் அலுவலர் ஷேணு அகர்வால் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 3 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, அசோக் லேலண்ட் நிறுவனத்தின் பெருநிறுவன சமூக பொறுப்புத் தலைவர் (CSR) என்.வி. பாலசந்தர், துணைத் தலைவர் டி. சசிகுமார் ஆகியோர் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (9.12.2023) தலைமைச் செயலகத்தில், PSG குழுமத்தின் லீப் கிரீன் எனர்ஜி பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜீவ் கார்த்திகேயன் மற்றும் நிறுவனர் மற்றும் முதன்மைச் செயல் அலுவலர் தேவ் ஆனந்த் ஆகியோர் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 1 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள். உடன் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா உள்ளார்.



முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தாம்பரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 4வது மண்டலத்தில் உள்ள கன்னட பாளையம், சமத்துவபுரம், அன்னை அஞ்சுகம் நகர், சசிவர்தன் நகர், ஆகிய பகுதிகளில், நாடாளுமன்ற குழு தலைவர், கழக பொருளாளர் டி.ஆர்.பாலு அவர்கள், மிக்ஜாம் புயல் மழை வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கினார். இந்நிகழ்வில் தாம்பரம் மாநகரச் செயலாளர் / தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, மேயர் திருமதி. க.வசந்தகுமாரி, துணை மேயர் ஜி.காமராஜ், தாம்பரம் மாநகராட்சி ஆணையாளர் அழகுமீனா ஐ.ஏ.எஸ்., மண்டல குழுத்தலைவர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன், எஸ்.சேகர், மாமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், அதிகாரிகள் உள்ளனர்.




நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு தலைமையில், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா முன்னிலையில், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கனமழை மற்றும் மிக்ஜாம் புயல் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அகற்றப்பட்ட நீர்த்தேக்கங்கள், விழுந்த மரங்கள் மற்றும் குப்பைகள், பள்ளிகளில் மேற்கொள்ளப்பட்ட சீரமைப்புப் பணிகள், சீரான மின் விநியோகம், குடிநீர் விநியோகம் உள்ளிட்ட களப்பணி நடவடிக்கைகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் நேற்று முன்தினம் (09.12.2023) ரிப்பன் கட்டட கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் ஹனீஸ் சாப்ரா, சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், நகராட்சி நிருவாக இயக்குநர் சு.சிவராசு, காணொலிக் காட்சியின் வாயிலாக மண்டல கண்காணிப்பு அலுவலர்கள், கூடுதல் ஆணையர்கள், இணை ஆணையர், துணை ஆணையர் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மிக்ஜாம் புயலினால் பாதிக்கப்பட்ட, வேளச்சேரி, மடிப்பாக்கம், பள்ளிக்கரணை பகுதி மக்களுக்கு 5வது நாளாக நேற்று முன்தினம் (9.12.2023) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு 1/2 லிட்டர் பால் பாக்கெட் 8000, பிஸ்கெட் 16000, சுவீட் பன் 5000, சேமியா, ரவா 500, கோதுமை 5500, அரிசி 5கிலோ பேக் 3000, அரிசி 4 கிலோ பேக்500, அரிசி 2 கிலோ பேக் 7500, வாட்டர் பாட்டில்1000, கைலி 10000, போர்வை14000, டவல்3800, சேலை1500, நைட்டி 3500, குழந்தைகள் துணி 500, பாய் 5000 மற்றும் மருந்துப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு 9000 ஆகிய நிவாரணப் பொருட்கள், சுமார் 20 லாரிகளில் கொண்டு சென்று நேரில் வழங்கினார்.



# இதர நிவாரண உதவித் தொகைகளும் உயர்த்தி வழங்கப்படும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!... முதல் பக்கத் தொடர்ச்சி

இவ்வாறு பல்வேறு மீட்பு மற்றும் சீரமைப்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில், மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவித் தொகை வழங்குவது தொடர்பான ஆலோச னைக் கூட்டம், தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (9.12.2023) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் உள்ளிட்ட உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். வெள்ள சேதம் குறித்தும், வழங்கப்பட வேண்டிய நிவாரணத் தொகை குறித்தும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் விவாதிக்கபட்டது.

• இதனடிப்படையில், மிக்ஜாம் புயலால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத் தொகையாக ரூபாய் 6 ஆயிரம் வழங்கிட முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். இந்த நிவாரணத் தொகையினை, பாதிக்கப்பட்டவர்கள் குடி யிருக்கும் பகுதிகளில் உள்ள நியாய விலைக் கடைகளின் மூலம் ரொக்கமாக வழங்கிட முதலமைச்சர் அவர்கள் உத்தர விட்டுள்ளார்கள்.

• அதுமட்டுமின்றி, புயல், வெள்ளத்தினால் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு, இழப்பீட்டுத் தொகையை ரூபாய் 4 இலட்சத்திலிருந்து, 5 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கிடவும்;

## சேதமடைந்த குடிசைகளுக்கு ரூபாய் 8000

•சேதமடைந்த குடிசைகளுக்காக ஏற்கெனவே வழங்கப்படும் தொகை ரூபாய் 5 ஆயிரத்தினை, ரூபாய் 8 ஆயிரமாக உயர்த்தி வழங்கிடவும்;

•மழையினால் பாதிக்கப்பட்ட (33 விழுக்காடு மற்றும் அதற்கு மேலாக) நெற்பயிர் உள்ளிட்ட இறவைப் பாசனப் பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.13,500/லிருந்து, ரூபாய் 17 ஆயிரமாக உயர்த்தி வழங்கிடவும்;

•பல்லாண்டு பயிர்கள் மற்றும் மரங்கள் (Perennial crops and trees) சேதமுற்றிருப்பின் (33 விழுக்காடு மற்றும் அதற்கு மேலாக) இழப்பீடாக ஹெக்டேர் ஒன்றுக்கு ரூபாய் 18 ஆயிரம் ரூபாயிலிருந்து, ரூபாய் 22,500/ஆக உயர்த்தி வழங்கிடவும்;

•மழையினால் பாதிக்கப்பட்ட (33 விழுக்காடு மற்றும் அதற்கு மேலாக) மானா வாரிப் பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.7,410/லிருந்து, ரூ.8,500/ஆக உயர்த்தி வழங்கிடவும்;

•எருது, பசு உள்ளிட்ட கால்நடைகளின் உயிரிழப்பு நிவாரணமாக ரூ.30,000/ என்றிருந்ததை, ரூ.37,500/ஆக உயர்த்தி வழங்கிடவும்;

•வெள்ளாடு, செம்மறி ஆடு உயிரிழப்பு நிவாரணமாக ரூ.3,000/ என்றிருந்ததை, ரூ.4,000/ உயர்த்தி வழங்கிடவும்;

•சேதமடைந்த படகுகள் மற்றும் வலைகளுக்கு நிவாரண உதவிகளைப் பொறுத்த வரையில், முழுமையாக சேதமடைந்த கட்டுமரங்களுக்கு (மீன்பிடி வலைகள் உட்பட), ரூ.32,000/லிருந்து, ரூ.50 ஆயிர மாகவும், பகுதியாக சேதமடைந்த கட்டுமரங்களுக்கு ரூபாய் 10 ஆயிரத்திலிருந்து, ரூபாய் 15 ஆயிரமாகவும், முழுவதும் சேத மடைந்த வல்லம் வகை படகுகளுக்கு வழங்கப்படும் அதிகபட்ச மானியத் தொகை ரூபாய் 75 ஆயிரத்திலிருந்து, ரூபாய் ஒரு இலட்சமாகவும், முழுவதும் சேதமடைந்த இயந்திரப் படகுகளுக்கு வழங்கப்படும் அதிகபட்ச மானியத் தொகை ரூபாய் 5 இலட்சத்திலிருந்து, ரூபாய் 7.50 இலட்ச மாகவும் உயர்த்தி வழங்கிடவும், சேதமடைந்த வலைகளுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகை ரூபாய் 10 ஆயிரத்தி லிருந்து, ரூபாய் 15 ஆயிரமாக உயர்த்தி வழங்கிடவும்; முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இவ்வாறு அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

புயல்-மழை: 24 தொழிற்பேட்டைகளில் 4,808 சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் பாதிப்பு!

# தொழில் நிறுவனங்களுக்கு கூடுதல் மூலதனக் கடன் வழங்குக!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஒன்றிய நிதி அமைச்சருக்குக் கடிதம்!

சென்னை, டிச.11 –

**“மிக்ஜாம்” புயல் காரணமாக ஏற்பட்ட பெருமழையால் பாதிக்கப்பட்டுள்ள குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்குக் கூடுதல் மூலதனக் கடன், கடன் திரும்ப செலுத்தும் காலத்தை நீட்டித்தல் உள்ளிட்ட, முக்கிய உதவிகளை வழங்கிட ஒன்றிய நிதி மற்றும் பெரு நிறுவன விவகாரங்கள் துறை அமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் “மிக்ஜாம்” புயல் காரணமாக ஏற்பட்ட பெருமழையால் பாதிக்கப்பட்டுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு கூடுதல் மூலதன கடனுதவி வழங்கிடவும், காப்பீட்டு தொகையை விரைந்து வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு முக்கிய கோரிக்கைகளை வலியுறுத்தி ஒன்றிய நிதி மற்றும் பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் அவர்களுக்கு நேற்று முன்தினம் (9.12.2023) கடிதம் எழுதியுள்ளார்.

அண்மையில் ஏற்பட்ட “மிக்ஜாம்” புயல் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களிலுள்ள தொழில் நிறுவனங்களை கடுமையாக பாதித்து உற்பத்தியிழப்பை ஏற்படுத்தியுள்ளது. இம்மாவட்டங்களில் 24 தொழிற்பேட்டைகளில் உள்ள சுமார் 4800 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் இடைவிடாத பெரு மழையினால் அதிகமான பாதிப்பிற்குள்ளானது மட்டுமல்லாமல் மூலப்பொருட்கள் மற்றும் உற்பத்தியான பொருட்கள் சேதம் அடைந்து தொழில் நிறுவனங்கள் முழுமையாக செயல்பட இயலாத நிலையில் உள்ளது.

இந்த நிறுவனங்கள் பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவது, ஏற்றுமதி மற்றும் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிப்பது ஆகியவற்றை கருத்தில் கொண்டு இந்நிறுவனங்களை உடனடியாக மீட்டெடுப்பது அவசியமென்பதினை முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.

மாநில அரசு மின் விநியோகம் மற்றும் சாலை போக்குவரத்தை உடனடியாக சீர் செய்துள்ளபோதும், இந்நிறுவனங்கள் மீண்டும் முழுமையாக உற்பத்தியை துவங்க சிறிது காலம் தேவைப்படும் என்பதால் பாதிக்கப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு கடன் திருப்பி செலுத்தும் காலத்தை மாற்றியமைத்திடவும், கூடுதல் மிகைப்பற்று (Over Draft) வசதியினை வழங்கிடவும், கூடுதல் நடைமுறை மூலதன கடன் வழங்க வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களை அறிவுறுத்தவும், காப்பீட்டு தொகையை காலதாமதமின்றி மதிப்பீடு செய்து உடனடியாக விடுவிக்க விரைந்து நடிவடிக்கை எடுக்க காப்பீட்டு நிறுவனங்களை அறிவுறுத்திடவும் கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

இந்த நடவடிக்கைகள் புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பொருளாதார ரீதியாக மீண்டெழ உறுதுணையாக அமையும் என்றும் அவர் அந்தக் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

---

சேதமடைந்த அரசு சான்றிதழ்கள் - பள்ளிக் கல்லூரி சான்றிதழ்கள்

# சிறப்பு முகாம் மூலம் கட்டணமின்றி வழங்க நடவடிக்கை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, டிச. 11 –

**“மிக்ஜாம்” புயல், வெள்ள பாதிப்பினால் சேதமடைந்த அரசு சான்றிதழ்கள், பள்ளி கல்லூரி சான்றிதழ்களை பொது மக்கள் மற்றும் மாணவர்களுக்குக் கட்டணமின்றி வழங்கிட சிறப்பு முகாம்கள் மூலம் வழங்கிட முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.**

தமிழ்நாட்டில் “மிக்ஜாம்” புயல் காரணமாக சென்னை மாவட்டத்திலும், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் குறிப்பிட்ட சில பகுதிகளிலும் வரலாறு காணாத மழைப்பொழிவு ஏற்பட்டு, கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டுள்ள நிலையில், தமிழ்நாடு அரசால் பல்வேறு மீட்பு மற்றும் மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மழை, வெள்ள பாதிப்பினால் குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை, பிறப்புச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ், வாரிசு சான்றிதழ், பள்ளி, கல்லூரிச் சான்றிதழ்கள் உள்ளிட்ட அரசு ஆவணங்களை இழந்தவர்கள், அவற்றை மீண்டும் பெறும் வகையில், அதற்கென சிறப்பு முகாம்களை நடத்தி, பொது மக்களுக்கு கட்டணமின்றி அதனை வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அதனடிப்படையில், காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட வருவாய் வட்டங்களில், குறுவட்ட அளவிலான சிறப்பு முகாம்கள் இன்று (11-12-2023 - திங்கட்கிழமை), சென்னை மாவட்டத்தில், சென்னை மாநகராட்சியின் கோட்ட அலுவலகங்களில் நாளையும் (12—12-2023 செவ்வாய்க்கிழமை) அன்றும் தொடங்கப்படும்.

சிறப்பு முகாம்கள் நடைபெறும் இடம் மற்றும் நேரம் குறித்த அறிவிப்பு தொடர்புடைய மாவட்ட ஆட்சியர்கள் மூலம் அறிவிக்கப்படும். மேற்படி சிறப்பு முகாம்களில், பொதுமக்களின் வசதிக்கென, இசேவை மையங்களும் செயல்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

---

புயல் சேதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட

# ஒன்றிய அரசின் குழு இன்று சென்னை வருகை!

புதுடெல்லி, டிச.11 –

மிக்ஜாம் புயலால், சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்களில் பாதிப்பு ஏற்பட்டது. இந்த பாதிப்பை தேசிய பேரிடராக அறிவிக்க வேண்டும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஒன்றிய அரசுக்கு வலியுறுத்தினார். மேலும், புயல் வெள்ள நிவாரணத்திற்காக 5 ஆயிரத்து 60 கோடி ரூபாய் வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்திருந்தார்.

அதனைத்தொடர்ந்து, சென்னை வருகை தந்த பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், புயல், மழை, வெள்ள பாதிப்புகளை ஹெலிகாப்டரில் சென்று பார்வையிட்டார். பின்னர், முதலமைச்சருடன் ஆலோசனை நடத்தினார்.

இந்நிலையில், புயல் பாதித்த பகுதிகளை ஆய்வு செய்ய மத்தியக்குழு இன்று (திங்கட்கிழமை) சென்னை வரவுள்ளது. புயல் பாதித்த பகுதிகளை 2 நாட்கள் ஆய்வு செய்யும் அக்குழு, செவ்வாய்க்கிழமையன்று, தலைமைச் செயலகத்தில், தலைமைச்செயலாளருடன் ஆலோசனை நடத்திவிட்டு, டெல்லி செல்லவுள்ளது.

---

மனித உரிமை மீறல் நிகழ்வுகள் எங்கும் நடைபெறாமல் முற்றிலும் தடுப்போம்!

# ‘மண்ணில் மனிதம் காப்போம்!’ என இந்நாளில் உறுதியேற்போம்!

## மனித உரிமைகள் நாள் செய்தியில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் சூளுரை!

சென்னை, டிச. 11 –

**மனித உரிமைகள் நாளையொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்த செய்தியில், “மனித உரிமை மீறல் நிகழ்வுகள் எங்கும் நடை பெறாமல் முற்றிலும் தடுப்போம்!” எனவும், “மண்ணில் மனிதம் காப்போம்!” என இந்நாளில் உறுதியேற்போம்!” எனவும் சூளுரைத்துள்ளார்.**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உலக மனித உரிமைகள் நாள் செய்தி வருமாறு:-

மனிதனை மனிதனாக மதித்திட வேண்டும் எனும் மனிதநேய உணர்வை வளர்த்திடும் நோக்கில் ஆண்டு தோறும் டிசம்பர்த் திங்கள் 10ஆம் நாள், உலக நாடுகளால், “உலக மனித உரிமை நாள்” என்பது கடைப்பிடிக்கப்படுகிறது.

இந்த ஆண்டு உலக மனித உரிமைகள் பிரகடனத்தின் 75ஆவது ஆண்டு ஆகும். அவ்வகையில் “அனைவருக்கும் சுதந்திரம், சமத்துவம் மற்றும் நீதி” (Freedom, Equality and Justice for All) என்பதை இந்த ஆண்டிற்கான மனித உரிமைகள் நாள் கருப்பொருளாக (Theme) ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

1948ஆம் ஆண்டு டிசம்பர் 10ஆம் நாள் ஐக்கிய நாடுகள் பொதுச் சபை (United Nations General Assembly) மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனத்தை ஏற்று வெளியிட்டது; அப்பிரகடனத்தை ஏற்றுக்கொள்வதில் முக்கியப் பங்காற்றிய நாடுகளில் இந்தியாவும் ஒன்று. அதனைத் தொடர்ந்து இந்தியாவில் மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 28.9.1993 அன்று நிறைவேற்றப்பட்டது.

அச்சட்டப்படி, இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தமிழ்நாட்டில்தான் தி.மு.க. அரசு மனித உரிமை மீறல் நிகழ்வுகள் எங்கும் நிகழக்கூடாது எனும் எண்ணத்துடன் 17.4.1997 அன்று ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் ஒருவர் தலைமையில், “தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையம்” எனும் புதிய அமைப்பை ஏற்படுத்தியது.

இந்த ஆணையம், இந்திய அரசியல் சட்டமும், நீதிமன்றங்களும் ஒவ்வொரு மனிதனுக்கும் அளித்திடும் வாழும் உரிமை, எழுத்துரிமை, பேச்சுரிமை, சுதந்திரம் போன்றவைகளை நிலை நாட்டுவதற்காகப் பாடுபடுகிறது. இந்த ஆணையம் தொடங்கப்பட்ட 17.4.1997 முதல் 2023 செப்டம்பர் வரை இந்த ஆணையத்திற்கு வரப்பெற்ற 2 இலட்சத்து 60 ஆயிரத்து 55 முறையீடுகள் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, 2 இலட்சத்து 17 ஆயிரத்து 918 முறையீடுகள் மீது தீர்வு கண்டு, ஆணை பிறப்பித்து நலிந்தவர்களின் நலன் காக்கும் திருப்பணிகளைச் சிறப்பாகச் செய்து வருகிறது.

எந்த இடத்தில், எவர், எதனால் பாதிக்கப்படுகிறார்களோ, அந்த இடத்திற்கு, உடனே விரைந்து சென்று அவருக்கு ஏற்பட்ட பாதிப்பிலிருந்து அவரை விடுவித்துக் காப்பாற்றும் இதயம் கொண்டது இந்த அரசு.

மாமல்லபுரம் அருகில் பூஞ்சேரி கிராமத்தைச் சேர்ந்த ஒரு நரிக்குறவர் சமுதாயப் பெண்ணும், அவரது குழந்தையும் அப்பகுதியில் நடைபெற்ற சமபந்தி விருந்தில் பங்குகொள்ளச் சென்றபோது, சிலர் அவர்களைத் தடுத்துத் திருப்பி அனுப்பிய செய்தி கேட்டு, மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் மூலம் அவர்கள் விருந்தில் பங்கு பெறச் செய்ததுடன். அடுத்து, பூஞ்சேரி சென்று, அந்தப் பெண்ணின் இல்லம் சென்று, அவருக்கு ஆறுதல் கூறியது இந்த அரசு. அத்துடன், அப்பகுதி வாழ் நரிக்குறவர் மற்றும் இருளர் சமுதாயத்தைச் சேர்ந்த 282 பேருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் உட்பட பல நலத்திட்ட உதவிகள் வழங்கி அவர்களைப் பெருமைப்படுத்தியதும் இந்த அரசுதான். அதேபோல, மகளிர்க்கு நகரப் பேருந்துகளில் கட்டணமில்லாப் பயணச் சலுகை வழங்கியதுடன் 2023 செப்டம்பர் 15, பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்தநாளில் மாதம் தோறும் 1000 ரூபாய் வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தைத் தொடங்கிவைத்து, இது உதவித் தொகையல்ல, உரிமைத்தொகை என்று கூறி மகளிர் சமுதாய உரிமையைப் போற்றி, நலிந்தவர் நலம் காக்கும் நல்ல அரசாகத் திகழ்கிறது இந்த அரசு என்பதை இவ்வேளையில் சுட்டிக் காட்டிட விரும்புகிறேன்.

இந்த உணர்வோடு, மனித உரிமை மீறல் நிகழ்வுகள் எங்கும் நடைபெறாமல் முற்றிலும் தடுப்போம்! அதற்கு உறுதுணையாக ஒவ்வொரு நொடியும் விழிப்புடன் செயல்படுவோம்! மண்ணில் மனிதம் காப்போம்! என அனைவரும் இந்நாளில் உறுதியேற்போமாக!

இவ்வாறு அச்செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை வட்டாரம், வடுகப்பட்டி ஊராட்சியில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில், பாலின வள மையம், வானவில் மைய கட்டிடத்தினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்து, பாலின வன்முறை தவிர்த்தலுக்கான பிரச்சார உறுதி மொழியினை ஏற்றுக்கொண்டார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், விராலிமலை ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.காமு.மு.பி.மணி, இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.தெய்வ நாயகி, உதவி திட்ட அலுவலர் ஜெயராமன், ஒன்றியக் குழு உறுப்பினர் மு.பி.ம.சத்தியசீலன், ஊராட்சிமன்றத் தலைவர் திருமதி. ஜெயலட்சுமி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறுபான்மையினர்நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் மகளிர் சுய உதவி குழுவிற்கு ரூ.6.93 கோடி மதிப்பில் வங்கி கடன் உதவிக்கான காசோலையை வழங்கினார். அருகில் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் உள்ளனர்.

### இளைஞர் அணி 2-வது மாநில மாநாட்டு இருசக்கர வாகனப் பேரணி!

# திருவாரூர் மாவட்ட இளைஞர்களுக்கு பாராட்டு - நினைவுப் பரிசு!

## மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

திருவாரூர்,டிச.11-

சேலத்தில் நடைபெற இருக்கும் இளைஞர் அணியின் இரண்டாவது மாநாட்டினை ஒட்டி தமிழ்நாடு முழுவதும் நடைபெற்ற இருசக்கர வாகன பிரச்சார பேரணியில் பங்கேற்ற திருவாரூர் மாவட்ட இளைஞர்களுக்கு மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. பாராட்டி நினைவு பரிசு வழங்கினார்.

தமிழ்நாட்டின் எதிர்காலம் இளைஞர்களின் நம்பிக்கை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சரும் இளைஞர் அணியின் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு அரசின் முதல்வர் கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல்களின்படி இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாடு சேலத்தில் நடைபெற இருப்பதையொட்டி, அதன் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும்விதமாக இருசக்கர வாகன பேரணியை உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கிவைத்த நிலையில், அந்த வாகனபேரணி தமிழ்நாடு முழுவதும் பயணம் மேற்கொண்டு மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றது.

இந்த வாகனப்பேரணியானது திருவாரூர் மாவட்டத்தில் உள்ள திருவாரூர்,மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, நன்னிலம் ஆகிய நான்கு தொகுதிகளிலும் பிரச்சாரம் மேற்கொண்ட நிலையில், பேரணிக்கு மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.ஏல்.ஏ., தலைமையில் பிரமாண்ட வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்த வரவேற்பு நிகழ்வில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.எஸ்.குமார் உள்ளிட்ட இளைஞர் அணியினர் மற்றும் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பகலவன் உள்ளிட்ட மாணவர் அணியினர் மற்றும் மாநில மாவட்ட ஒன்றிய நகர பேரூர் நிர்வாகிகள், ஏராளமான இளைஞர்கள் கழக தோழர்கள் பொதுமக்கள் பங்கேற்றனர்.

இந்த பேரணியில் திருவாரூர் மாவட்டத்தில் இருந்து மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எம்.பி.எடிசன் , விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட துணை அமைப்பாளர் விமல்ராஜ், அயலக அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் சோலை.சிவா மற்றும் ராஜசேகர் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர் . இந்த பங்கேற்பாளர்களை கவுரவிக்கும் விதமாக திருவாரூர் மாவட்ட தி.மு.க. சார்பில் அனைவருக்கும் நினைவு பரிசுகளை வழங்கி மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.ஏல்.ஏ. பாராட்டினார்.

### கே.கே.செல்லப்பாண்டியன் தலைமை! மு.க.ராமகிருஷ்ணன் வரவேற்புரை!

# புதுக்கோட்டை தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் மாலையீட்டில் மாபெரும் பொதுக்கூட்டம்!

## ராஜீவ் காந்தி - கவிச்சுடர் கவிதைப்பித்தன் சிறப்புரை!

புதுக்கோட்டை, டிச. 11.

இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா பொதுக் கூட்டம் 8.12.2023 வெள்ளிக் கிழமை மாலை 6.00 மணியளவில் புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், புதுக்கோட்டை தெற்கு ஒன்றியம் கவிநாடு கிழக்கு, கவிநாடு மேற்கு ஊராட்சி சண்முகாநகரில் (மாலையீடு) மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் நடைபெற்றது.

புதுக்கோட்டை தெற்கு ஒன்றியச் செயலாளர் மு.க.இராமகிருஷ்ணன் அனைவரையும் வரவேற்றார். கழக மாணவர் அணி தலைவர் வழக்கறிஞர் ராஜீவ் காந்தி, கழக இலக்கிய அணி துணைத் தலைவர் கவிச்சுடர் கவிதைப் பித்தன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இந்நிகழ்வுகளில் மாவட்ட துணைச் செயலாளர் பி.ராஜேஸ்வரி, மாவட்ட பொருளாளர் எம்.லியாகத் அலி, புதுக்கோட்டை நகர கழக செயலாளர் ஆ.செந்தில், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சு.சண்முகம், ஒன்றிய செயலாளர் ஆர்.ஆர்.சாமிநாதன், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் ஜெயலட்சுமி தமிழ்செல்வன், ஒன்றிய பெருந்தலைவர் சின்னையா, மு.கலியமூர்த்தி, எம்.எம்.பாலு, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் டாக்டர் மு.க.முத்துக்கருப்பன், எம்.சுப்பையா, டி.எம்.ஆர்.ராமமூர்த்தி, வி.என்.எம்.பாலமுருகன், வி.ஜி.ஆர்.மணிவண்ணன், ச.இளையசூரியன், சி.அரங்கநாயகம், வே.ராஜேஷ், எஸ்.வி.ஆர்.ஸ்டாலின், மு.கலைஞர் கருணாநிதி, மு. இளஞ்சேரன், அ.ரெத்தினம், மழையூர் ராமசாமி, கமலா செல்வம்,

ஒன்றிய கழக நிர்வாகிகள் ப.குமாரவேல், டி.சுப்ரமணியன், எம்.மாரிமுத்து, எஸ்.நாகராஜன், எஸ்.ஆரோக்கியசாமி, ஆர்.அர்ச்சுணன், ரேணுகா ராஜகோபால், ஏ.எஸ்.கருணாநிதி, மாவட்ட துணை அமைப்பாளர்கள் பெ. தெய்வானை, ஆர்.கே.ரெத்தின சபாபதி, ஜெயந்தி வெள்ளைச்சாமி, ஊ.ம.தலைவர் ரெங்கம்மாள் பழனிச்சாமி, கி.சுப்ரமணியன், தமிழினியன், ஏ.கலியமுத்து, ஏ.எம்.ஆறுமுகம், எஸ்.ஜெகநாதன், கவிஞர் மரிய எட்வின், டி.எம்.ஆர்.மூர்த்தி, எஸ்.வி.ஆர்.அர்வின் ராஜா, செந்தில்குமார், ஆர்.சின்னத்துரை, எம்.டி.ராமசாமி, வி.ஆர்.எம்.தங்கராஜ், ஏ.அன்புலாசர், டி.சிவக்குமார், க.செ.மணிமாறன், க.செ.கலியமூர்த்தி, எம்.பன்னீர், க.உடையப்பன், தில்லையப்பன், கே.எம்.சாமியய்யா, பாடகர் இளையராஜா, முருகன், தமிழ் ஓவியா, குழந்தைவேல், பிச்சை, பாலு, சரவணன், மாரிமுத்து, கபிலன், காதர் கனி, மணி, பிரபு, விஜயகுமார், தனபால் மற்றும் ஏராளமான கிளை கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

நிறைவாக அமைப்பு சாரா ஓட்டுநர் அணி மாவட்ட தலைவர் ஏ. வெற்றிச்செல்வம், கவிநாடு மேற்கு செல்வராஜ் ஆகியோர் நன்றியுரையாற்றினார்கள்.

கூட்டத்தில் புதுக்கோட்டை தெற்கு ஒன்றிய திமுக சார்பில் கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் புதுக்கோட்டை வருகை தந்த போது விபத்தில் மரணம் அடைந்த மரவப்பட்டி ராமன் மனைவி இந்திராவுக்கு ரூ.50 ஆயிரம் நிதி வழங்கப்பட்டது.

### முன்னாள் எம்.எல்.ஏ.

# செ.புஷ்பராஜ் மாமியார் கி.லீலாவதி மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



விழுப்புரம், டிச. 11-

முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், மாநில ஆதிதிராவிடர் நலக் குழு இணைச் செயலாளருமான செ. புஷ்பராஜ் அவர்களின் மாமியார் கி. லீலாவதி அவர்கள் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

பல்லாவரம் வட்டம் பொழிச்சலூர் ஊராட்சி அமரர் கிருஷ்ணன் அவர்களின் மனைவியும் கி.வீரராகவன் எம்.சி.யின் தாயாரும். மாநில ஆதிதிராவிட நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜின் மாமியாருமான கி.லீலாவதி. அவர்கள் 09.12. 2023 அன்று இரவு 8.30 மணியளவில் இயற்கை எய்தினார். இச்செய்தியறிந்ததும் கழகத்தினர் அன்னாரின் உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர். அன்னாரின் இறுதி ஊர்வலம் (10.12.2023) அன்று மதியம் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு பொழிச்சலூர் ஊராட்சியில் உள்ள இடுகாட்டில் இறுதிச் சடங்குகள் நடைபெற்றன.

### மேல்மலையனூரில்

# ரூ.6.93 கோடியில் மகளிர்களுக்கு கடன் உதவிகள்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கினார்!

செஞ்சி. டிச. 11-

விழுப்புரம் மாவட்டம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் மேல்மலையனூர் வட்டார அளவிலான மகளிர் சுய உதவிக் குழு கூட்டமைப்புக்கான கடன் உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார். வட்டார வளர்ச்சி அலுவலர்கள் குலோத்துங்கன், சரவணகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மேல்மலையனூர் வட்டார இயக்க மேலாளர் பிரபாவதி அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு மேல்மலையனூர் வட்டார அளவில் ஊராட்சி மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு பெருங்கடனாக ரூபாய் 6 கோடியே 93 லட்சம் ரூபாய்க்கான காசோலையும்,நேரடி கடனாக 30 லட்சத்து 67 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான், பெண்கள் கல்வியில் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடையவேண்டும் என்பதற்காக மகளிர் சுய உதவிக் குழுவிற்கு கடன் உதவிகள் வழங்கி அவர்களை கோட்டீஸ்வரிகளாக ஆகியவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள்

பேருந்தில் பெண்களுக்கு கட்டணமில்லா பயணம்,மகளிர்க்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம், தாய்மார்களின் சுமையை குறைக்க வேண்டும் என்பதற்காககாலை உணவு திட்டதின் மூலம்தமிழ்நாடு முழுவதும் 18 லட்சம் குழந்தைகளுக்கு ஒரு தாய்க்கு தாயாக மாறி முதலமைச்சர் காலை சிற்றுண்டி திட்டத்தை தொடங்கி வைத்துள்ளார்என அமைச்சர் செஞ்சி மஸ்தான் பெருமைப்பட தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் வட்டார கல்வி குழு தலைவர் நெடுஞ்செழியன்,ஒன்றிய துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன், மாவட்ட கவுன்சிலர்கள் சாந்தி சுப்பிரமணியன், செல்வி ராம சரவணன்,ஒன்றிய கவுன்சிலர்கள் யசோதரை சந்திர குப்தன், ரவிச்சந்திரன், ராஜா, லட்சுமி கணபதி, ஜெயலட்சுமி தஷ்ணாமூர்த்தி,துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பிரபா சங்கர், இளங்கோவன், உதயகுமார், சரவணன், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### கன மழையினால் பாதிப்புக்குள்ளான

# பெரம்பூர் பகுதிகளில் நிவாரணப் பணிகளை துரிதப்படுத்த அலுவலர்களுக்கு அறிவுரை!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேட்டி!



சென்னை, டிச.11-

“மிக்ஜாம் புயல்” காரணமாக தொடர்ந்து பெய்த கன மழையினால் சென்னை, செங்கல் பட்டு, திருவள்ளூர் மாவட்டங்கள் பெரிதும் பாதிபடைந்தது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி கூட்டுறவுத்து றை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் பாதிப்புக் குள்ளான பெரம்பூர் பகுதிகளில் பல இடங்களுக்குச் சென்று ஆய்வு மேற்கொண்டு, மேற்கொள்ளப் பட்டு வரும் நிவாரணப் பணிகளை துரிதப்ப டுத்த அலுவலர்களுக்கு தக்க அறிவுரைகளை வழங்கினார். மேலும், அப்பகுதியில் உள்ள மக்களுக்கு உணவு வழங்கினார்.

அதன்படி, நேற்று (9.12. 2023) கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் பெரம்பூர், 44வது வார்டு, முனியப்பன் தெருவில் நடைபெற்று வரும் நிவாரணப்பணிகளை பார்வையிடுட்டு ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி :

சமீபத்தில் பெய்த வரலாறு காணாத கடும் மழையின் காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் சென்னை மாநகரத்தின் பல்வேறு பகுதிகள் வெகுவாக வெள்ளத்தால் பாதிக்கப் பட்டு மக்களுடைய இயல்பு வாழ்க்கை திரும்புவ தற்கு ஒரு சில தினங்கள் ஆனது. ஆனால் அப்படி 47 ஆண்டுகள் வரலாற்றில் இல்லாத அளவிற்கு பெரும் மழை பெய்தாலும் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் தலைமையிலான இந்த அரசு மேற்கொண்ட சீறிய முயற்சியின் காரணமாக அடிப்படை கட்டமைப்பு வசதிகள் சிறப்பாக உருவாக்கப்பட்டதன் கரணமாக பாதிப்பிலிருந்து இன்றைக்கு மக்கள் காப்பாற்றப்பட்டுள்ளார்கள் என்பதை இங்குள்ள மக்கள் நன்கு உணர்ந்தி ருக்கிறார்கள்.

குறிப்பாக, அந்த ஓரிரு நாட்கள் நீர்த்தேக்கம் ஏற்பட்டதன் காரணம், மிக்ஜாம் புயலின் காரணமாக கடல் சீற்றம் அடைந்து பெரும் கடல் அலைகள் உருவானதன் காரணமாக, நகரத்திலிருந்து கடலுக்குச் செல்லும் நீர் கடலில் கலக்க சற்று காலதாமதம் ஆனது. பிறகு புயல் கரையை கடந்த பின்பு கடல் சீற்றம் குறைந்து நீர் கடலுக்குள் செல்ல ஆரம்பித்தது. சென்னை மாநகரத்தின் பல பகுதிகள் இப்போது சகஜ நிலைக்கு திரும்பியுள்ளது.

அந்த வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, அமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, அமைச்சராகிய என்னை இந்த பெரம்பூர் சட்டமன்ற தொகுதியில் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளை பார்வையிட்டு அவற்றிற்கான தற்காலிக தீர்வுகள் மட்டுமல்லாமல், நிரந்தரமான பல தீர்வுகளை எடுப்பதற்கான அறிவுரைகளை வழங்கியுள்ளார்கள். பாதிக்கப் பட்டிருக்கக்கூடிய மக்களுக்கு தேவையான பொருட்களை வழங்கு வதற்கும் அறிவுரைகளை வழங்கியிருக்கிறார்கள். ஆகவே, நேற்றைய தினம் மக்கள் பிரதிநிதிகள், இயக்கத்தின் கழக வட்ட, பகுதி செயலாளர்கள் மற்றும் அரசின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் ஆகியோர்களோடு கூட்டத்தை நடத்தினோம்.

இன்றைய தினம் பெரம்பூர் சட்டமன்ற தொகுதியில் பாதிக்கப்பட்டுள்ள பல்வேறு பகுதி களுக்குச் சென்று பார்வையிட இருக்கின்றோம், நாளை முதல் தொடர்ந்து நாள் ஒன்றுக்கு 7 வட்டங்களிலும் 7000 குடும்பங்களுக்கு தேவையான உதவிப் பொருட்கள் அதாவது பெட்சீட், சேலை, அரிசி, கைலி, ரவை, ஆட்டா போன்ற பல பொருட்கள் ஒரு குடும்பத்திற்கு தேவையான அளவிற்கு வழங்க இருக்கின்றோம். இயல் நிலைக்கு திரும்புகின்ற மக்களுக்கு அவர்களுக்கு ஏற்பட்ட இந்த நெருக்கடியில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியிருக்கிறார்கள். அதன்படி, அரசின் சார்பிலும், இயக்கத்தின் சார்பிலும் உதவிகளை செய்து வருகிறோம்.

கேள்வி : குப்பை கழிவுகளை அகற்ற இன்னும் எவ்வளவு நாட்கள் ஆகும்?

பதில் : அதாவது, பொதுவாக மழை பெய்தவுடன் தெருக்களில் நீர் ஏறியிருக்கிறது. அந்த நீர் வடிவதற்கு ஓரிரு நாட்கள் ஆகும். நீர் வடிந்தவுடன் நாம் உடனடியாக வீடுகளிலோ, வீதிகளிலோ புலங்கி விட முடியாது. அவற்றை சுத்தம் செய்கின்ற பணி. இவைகள் எல்லாம் இப்போது நடந்திருக்கிறது. தேங்கியிருக்க க்கூடிய குப்பைகள் ஏறத்தாழ 70 சதவீதம் மேற்பட்ட வீதிகளில் குப்பைகளும் அகற்றப் பட்டுள்ளது. எஞ்சியுள்ள பகுதிகளிலும் மிக விரைவாக பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், துறையின் அமைச்சர் கே.என். நேரு அவர்களும் உத்தரவிட்டுள்ளார்கள். பணிகள் வேகமாக நடைபெற்று வருகிறது என கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்கள்.

இந்நிகழ்வின் போது, ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. மற்றும் மக்கள் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்

### தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட குளக்கரைக்கு பின்புறமாக

# கால்வாயில் ஆவின் பால் பாக்கெட்டுகள் கொட்டப்பட்டது உண்மைக்கு புறம்பானது!

## ஆவின் நிர்வாகம் விளக்கம்!

சென்னை, டிச.10

தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட குளக்கரைக்கு பின் புறமாக கால்வாயில் ஆவின் பால் பாக்கெட்டுகள் கொட்டப்பட்டு இருப்பதாக செய்திகள் வெளியிடப்பட்டன. இது தொடர்பாக கீழ்கண்டவாறு விளக்கம் அளிக்கப்படுகிறது.

ஆவின் நிறுவனம் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் சுமார் 15 லட்சம் லிட்டர் பால் சில்லறை விற்பனை யாளர்கள், பால் டெப்போக்கள் மற்றும் மொத்த விற்பனையா ர்கள் மூலமாக பொது மக்களுக்கு விற்பனை செய்து வருகிறது.

இந்நிலையில் 04.12.2023 தேதியன்று மிக்ஜாம் புயல் காரணமாக அதிக அளவில் மழை பொழிந்ததால் பல இடங்களில் தண்ணீர் தேங்கி மின்சாரம் தடைப்பட்டது. எனவே தாம்பரம் மற்றும் அதன் சுற்றியுள்ள பகுதிகளில் பல பால் விற்பனை நிலையங்கள் மற்றும் சூப்பர் மார்க்கெட்டுகள் மூடப்பட்டன. எனவே சில இடங்களில் 04.12.2023 தேதியன்று பொதுமக்களுக்கு பால் விற்பனை செய்ய இயலாத நிலை ஏற்பட்டது.

இதனால் 04.12.2023 அன்று விற்பனை செய்ய இயலாத ஆவின் பால் பாக்கெட்டுகள் மற்றும் தனியார் பால் பாக்கெட்டுகளை சில சூப்பர் மார்கெட்டுகள் மற்றும் வியாபாரிகள் அங்கே கொட்டி விட்டு சென்றதாக தெரியவருகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் ஆவின் பால் பாக்கெட்டுகள் வீணாக கால்வாயில் கொட்டப்பட்டது என்பது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது.




ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மிக்ஜாம் புயலினால் பாதிக்கப்பட்டுள்ள சென்னை பொதுமக்களுக்கு வழங்கும் பொருட்டு, மாவட்ட நிர்வாகம் மற்றும் தொண்டு நிறுவனங்கள் சார்பில், பல்வேறு நிவாரணப் பொருட்கள் அடங்கிய வாகனத்தினை அனுப்பி வைத்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் (பொ) திருமதி.வே.லதா, மாவட்ட வன அலுவலர்கள் வெங்கடேஷ் பிரபு (ஈரோடு சரகம்), சுதாகர் (ஆசனூர் சரகம்), உணவு பாதுகாப்பு அலுவலர் தங்கவிக்னேஷ் ஆகியோர் உடன் இருந்தனர்.



இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாட்டு பிரச்சார இருசக்கர வாகனப் பேரணியில் திருவாரூர் மாவட்டத்திலிருந்து பங்கேற்ற மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எம்.பி.எடிசன், விளையாட்டு மேன்பாட்டு அணி மாவட்ட துணை அமைப்பாளர் விமல்ராஜ், அயலக அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் சோலை.சிவா மற்றும் ராஜசேகர் உள்ளிட்டவர்களை கவுரவிக்கும் விதமாக திருவாரூர் மாவட்ட தி.மு.க. சார்பில் அனைவருக்கும் நினைவுப் பரிசுகளை வழங்கி மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.ஏல்.ஏ. பாராட்டினார்.

# ‘மிக்ஜாம்’ பெரும் புயல் : பாதிப்பிலிருந்து மீண்ட மக்கள்!

# நிவாரணப் பணிகளை முனைப்புடன் நிறைவேற்றும் கழக அரசு!



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதலின்படி நேற்று முன்தினம் (9.12.2023), பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க. நகர் 6–வது மண்டலத்துக்குட்பட்ட வார்டு–76, பெரம்பூர் பேரக்ஸ் சாலை, லட்சுமி மஹாலில் உயர்க் கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் மிக்ஜாம் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு நிவாரணப் பொருட்கள் மற்றும் உதவித்தொகைளை வழங்கினர். இந்நிகழ்வின் போது மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், பகுதிச் செயலாளர் சொ.வேலு எம்.சி., கண்காணிப்பு அலுவலர் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்கக இயக்குநர் ப.கணேசன், மண்டல அலுவலர் ஏ.எஸ்.முருகன் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.



பம்மல் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், உணவு பாதுகாப்புத் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆகியோர் நிவாரண உதவிகளை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆ.ர.ராகுல் நாத், சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி உள்ளனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (09.12.2023) தமிழ்நாடு முழுவதும் 3000 இடங்களில் நடைபெறும் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாமினை தொடங்கி வைக்கும் விதமாக, கோடம்பாக்கம் மண்டலம், சைதாப்பேட்டை, கோதாமேடு ராஜ் திரையரங்கம் அருகில் நடைபெற்ற மழைக்கால சிறப்பு மருத்துவ முகாமினைத் தொடங்கி வைத்துப் பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், துணை மேயர் மு.மகேஷ் குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப்சிங் பேடி, கூடுதல் ஆணையர் (சுகாதாரம்) சங்கர்லால் குமாவத், மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், நிலைக்குழுத் தலைவர் (பொது சுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, மண்டலக் குழுத் தலைவர் எம். கிருஷ்ணமூர்த்தி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதலின்படி நேற்று முன்தினம் (9.12.2023), சென்னை, பிராட்வே, டான் போஸ்கோ மேல்நிலைப் பள்ளியில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு மிக்ஜாம் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட துறைமுகம் சட்டமன்ற தொகுதி. பெருநகர சென்னை மாநகராட்சி, 56வது வார்டுக்குட்பட்ட பி.ஆர். கார்டன், கச்சாலீஸ்வரர் கார்டன், ஆசிர்வாதபுரம், அப்பாராவ் தோட்டம், வள் ளுவர் நகர், கார்ப்பரேஷன் காலனி, செயின்ட் சேவியர் தெரு ஆகிய பகுதிகளில் வசிக்கும் 2,300 குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்கள் மற்றும் உதவித்தொகைகளை வழங்கினார். உடன் மாமன்ற உறுப்பினர் வெ.பரிமளம் மற்றும் ராஜசேகர், ராஜா, பரத்குமார் ஆகியோர் இருந்தனர்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதி திருவேற்காடு நகராட்சிக்கு உட்பட்ட நூம்பல் ஐ.சி.எல் வானகரம் ராஜீவ் நகர் உள்ளிட்ட பகுதிகளில் மழைநீர் தேங்கியுள்ள இடங்களில் நெய்வேலி என்எல்சி நிறுவனத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட ராட்சத மின் மோட்டார்களை வைத்து மழை நீரை அகற்றும் பணிகளை திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் ஆவடி சாமு.நாசர் எம்.எல்.ஏ முன்னிலையில் வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் திருவேற்காடு நகர மன்ற தலைவர் என்.இ.கே.மூர்த்தி, மாநில இளைஞரணி துணைச் செயலாளர் க.பிரபு கஜேந்திரன், ஆவடி மேயர் உதயகுமார், தலைமை தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், பொதுக்குழு உறுப்பினர் விமல்வர்ஷன், ஆவடி மாநகர பொறுப்பாளர் சன் பிரகாஷ், பகுதி செயலாளர் ஜி.ராஜேந்திரன், பொன்.விஜயன், நகராட்சி ஆணையர் ஜகாங்கீர் பாஷா, பொறியாளர் குமார், சுகாதார அலுவலர் ஆல்பர்ட் அருள்ராஜ், உள்ளிட்ட அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள் கவுன்சிலர்கள் உள்ளனர்



திருவள்ளூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை மற்றும் மிக்ஜாம் புயல் காரணமாக திருத்தணி சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு செல்லும் மலைப்பாதை சாலையின் பக்கவாட்டுப் பகுதி மற்றும் தடுப்பு சுவர் சுமார் 12 மீ அகலம், 8 மீ உயரத்திற்கு சேதம் அடைந்துள்ளதைத் தொடர்ந்து, அப்பகுதியை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, பாதிப்படைந்த பகுதியை விரைவில் சரி செய்து, பக்தர்களுக்கு சீரான சாலை போக்குவரத்தை உறுதி செய்ய சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். உடன் மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் த.பிரபு சங்கர், தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, வருவாய் கோட்டாட்சியர் க.தீபா, அறநிலையத்துறை இணை ஆணையர் ரமணி. நெடுஞ்சாலைத்துறை உதவி இயக்குநர் அன்பரசு, வட்டாட்சியர் மதன், நகரச் செயலாளர் வி.வினோத்குமார், உள்பட அறங்காவலர் குழு உறுப்பினர்கள், பொதுமக்கள் மற்றும் பல்வேறு துறை அரசு அலுவலர்கள் உள்ளனர்.



கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் நேற்று முன்தினம் (09.12.2023) பெரம்பூர், 44வது வார்டு, முனியப்பன் தெருவில் உள்ள நிவாரண முகாம்களில் பொதுமக்களுக்கு உணவு வழங்கினார். உடன் பெரம்பூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் ஆர்.டி.சேகர் மற்றும் மக்கள் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உடன் உள்ளனர்.



திருவொற்றியூர் தொகுதிக்குட்பட்ட மிக்ஜாம் புயலின் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண பணிகளை மேற்கொள்ள திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் முன்னிலையில் போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், வனத்துறை அமைச்சர் மதிவேந்தன், நாமக்கல் மாவட்ட கழக செயலாளர் மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.என்.ராஜேஷ் குமார் உள்ளிட்ட பொறுப்பாளர்கள் தொகுதி முழுவதும் மக்களுக்கு வேண்டிய அத்தியாவசிய பொருட்களையும் உணவு குடிநீர் மூன்று வேலையும் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். மழை நீர் வடிய தேவையான அனைத்துப் பணிகள் வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முன்னதாக கொசஸ்தலை ஆற்றின் ஒரு பகுதி பக்கிங் காம் கால்வாயை நேரில் சென்று ஆய்வு செய்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தனர். இந்நிகழ்வில் 5வது வட்ட செயலாளரும் மாமன்ற உறுப்பினருமான கே.பி.சொக்கலிங்கம் உடன் இருந்தார்.





அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திருமங்கலம் பாடிக்குப்பம் பகுதியில் அமைந்துள்ள கோல்டன் ஜூப்ளி அடுக்கு மாடி குடியிருப்பில் வசிக்கும் மக்களுக்கும், கொரட்டூர் கண்ணகி நகர் பகுதி மக்களுக்கும் அன்றாடத் தேவைகளுக்கான மழைக் கால நிவாரணப் பொருட்களை வழங்கினார். இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல் உடனிருந்தார்.

மின் கட்டணம் அபராதத் தொகை இல்லாமல் செலுத்த கால நீட்டிப்பானது

# சிறு, குறு, நடுத்தர தொழில் மின் நுகர்வோர் அனைவருக்கும் பொருந்தும்!

## அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவிப்பு!

சென்னை, டிச. 11 -

மின் கட்டணத்தை அபராதத் தொகை இல்லாமல் செலுத்த அறிவிக்கப்பட்ட காலநீட்டிப்பானது சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் மின் நுகர்வோர்கள் அனைவருக்கும் பொருந்தும் என்று நிதி, மின்சாரம் மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவித்துள்ளார்.

மிக்ஜாம் புயல் கனமழையின் காரணமாக மின் கட்டணம் செலுத்துவதில் மின் நுகர்வோர்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்பாடுகளை கருத்தில் கொண்டு மின் கட்டணத்தை அபராதத் தொகை இல்லாமல் செலுத்த அறிவிக்கப்பட்ட காலநீட்டிப்பானது, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு ஆகிய நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் மின் நுகர்வோர்கள் அனைவருக்கும் பொருந்தும் என நிதி, மின்சாரம் மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

இது குறித்து நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தெரிவித்துள்ளதாவது:



மிக்ஜாம் புயல் காரணமாக சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு ஆகிய நான்கு மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ள பாதிப்பினை தொடர்ந்து, முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி, கடந்த 06.12.2023 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பான சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு ஆகிய நான்கு மாவட்ட மின் உபயோகிப்பார்களின் மின் கட்டணம் செலுத்தும் கடைசி நாள் 04.12.2023 முதல் 07.12.2023 வரை இருந்த மின் நுகர்வோர்களுக்கு அபராத தொகை இல்லாமல் 18.12.2023 அன்று வரை மின் கட்டணம் செலுத்த கால நீட்டிப்பு வழங்கப்பட்டது".

இந்த அறிவிப்பானது முதலமைச்சர் அவர்களின் ஆணையின் படி சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு ஆகிய நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் மின் நுகர்வோர்கள் அனைவருக்கும் பொருந்தும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

பல்கலைக் கழகங்கள் - கல்லூரிகளில் செல்ஃபி பாய்ண்ட் அமைக்கும் அளவிற்கு,

இந்தியாவிற்கு என்ன முன்னேற்றம் கொண்டு வந்தார் மோடி?

# கல்லூரி மாணவர்களின் மனதில் சனாதனத்தை விதைக்க முற்படுவதா?

## பல்கலைக் கழக மானியக் குழுவிற்கு - கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் கண்டனம்!

**சென்னை, டிச. 11 -**

**தி.மு.க. மாணவர்அணிச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கையில், "விளம்பரப் பிரியர் மோடிக்கு, விளம்பர ஏஜெண்டாக எப்போது மாறியது யு.ஜி.சி.?**

**பல்கலைக் கழகங்கள், கல்லூரிகளில் செல்ஃபி பாயிண்ட் அமைக்கும் அளவுக்கு இந்தியாவிற்கு எந்த முன்னேற்றத்தை கொண்டு வந்தார் மோடி?**

**கல்லூரி மாணவர்களின் மனதில் சனாதனத்தை விதைக்க முற்படும் பல்கலைக் கழக மானியக் குழுவிற்கு தி.மு.க. மாணவர் அணி வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது" என்று குறிப்பிட்டுள்ளார்.**

மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ.வின் அறிக்கை வருமாறு:-

மாநில அரசின் நிதியினால் உருவாக்கப்பட்டு, அதன் வரிவருவாயைக் கொண்டு செயல்பட்டு கொண்டிருக்கும் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதி வழங்கவும், உயர்கல்வி நிறுவனங்களுக்கான நிதி உதவிகளை வழங்கவும், இந்தியாவின் பல்கலைக் கழகக் கல்வி ஒருங்கிணைப்பு, மேற்பார்வை, தரக் கட்டுப்பாடு பணிகளை மேற்கொள்ள தொடங்கப்பட்ட பல்கலைக் கழக மானியக் குழு கடந்த 01.12.2023 அன்று அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

பல்கலைக்கழக வளாகங்களில் பிரதமர் மோடியின் உருவத்துடன் கூடிய சுய புகைப்படம் (*Selfie Point*) எடுத்துக் கொள்ளும் "செல்ஃபி பாயிண்ட்" அமைப்பை ஏற்படுத்த அனைத்து பல்கலைக் கழகங்களுக்கும், கல்லூரிகளுக்கும் அனுப்பப்பட்ட சுற்றறிக்கையாகும்.

ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசால் கொண்டு வந்துள்ள தேசியக் கல்விக் கொள்கை 2020, பல்கலைக் கழக மானியக் குழுவின் அனைத்து அதிகாரங்களையும் பறிக்கும் சூழ்நிலை உள்ள நிலையில் அதனை செயல்படுத்த துடிக்கும் பிரதமர் மோடிக்கு சாமரம் வீசி, அவருக்கு விளம்பரம் தேடித்தரும் பணியில் பல்கலைக் கழக மானியக் குழு ஈடுபடுவது ஏன்? என்று கல்லூரி மாணவர்கள் கேள்வி எழுப்புவதை காது கொடுத்து கேட்டீர்களா?

பல்கலைக் கழகங்கள், கல்லூரிகளில் பயிலும் விளிம்புநிலை மாணவர்களுக்கு வழங்க வேண்டிய மானியத்தை கடந்த பத்து ஆண்டுகளாக முறையாக வழங்காமல், அதனை படிப்படியாக குறைத்து விட்டு தற்போது பாசிச பா.ஜ.க. மோடி அரசின் விளம்பர ஏஜெண்டாக எப்போது மாறியது? எனவும் மாணவர்கள் கேள்வி எழுப்புகின்றனர். மாணவர்களின் கேள்வி உங்கள் காதுகளில் விழவில்லையா?

பாசிச பா.ஜ.க. அரசின் சாதனைகளை பட்டியலிட வேண்டுமானால், பன்முகத் தன்மை வாய்ந்த இந்திய ஒன்றியத்தை காவிமயமாக்க துடிப்பது; இந்தியாவில் சிறுபான்மை யினரை வாழவிடாமல் செய்யும் அனைத்து காரியங்களையும் முன்னின்று செய்வது; சி.பி.ஐ., வருமானவரித் துறை, அமலாக்கத்துறை உள்ளிட்ட அமைப்புகளை எதிர்க்கட்சி யினர்மீது ஏவி அரசியல் செய்வது; இந்தியாவின் அனைத்து பொதுத் துறை நிறுவனங்களையும் தனியாருக்கு தாரை வார்ப்பது; ஒரே ஒரு நெருங்கிய நண்பருக்காக ஒட்டுமொத்த இந்தியாவையும் விற்க துடிப்பது; ரவுடிகளுக்கு அடைக்கலம் தருவது; ஊழலின் உறைவிடமாய் திகழ்வது என இப்படி அடுக்கடுக்காய் சொல்லிக்கொண்டே போகலாம் மோடி அரசின் சாதனைகளை...

அதையெல்லாம் இளைய சமுதாயத்தினர் தெரிந்துக் கொண்டால், அவர்கள் மனதில் சாதிய தீண்டாமை எண்ணங்களே பெருகும்! இந்தியா வல்லரசு ஆகாது; வருங்கால சந்ததியினர் கையில் ஆயுதங்களை ஏந்தி சிறுபான்மையினரை அச்சுறுத்தும் பணியிலும், மதக்கலவரங்களை ஏற்படுத்தும் பணியிலும் தான் ஈடுபடுத்தப்படுவர்!

இத்தாலியில் பாசிஸ்ட் கட்சியின் ஆட்சிக்கு தலைமை வகித்த முசோலினியும், ஜெர்மனியில் நாஜி கட்சி ஆட்சிக்கு தலைமை வகித்த ஹிட்லரும் பல்கலைக் கழகங்களை, ஆய்வாளர்களை தங்களின் உத்தரவிற்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தினர். அவர்கள் வழியில், இந்தியாவில் பாசிச பா.ஜ.க. ஆட்சிக்கு தலைமை வகிக்கும் மோடியும் அதையே செய்ய விரும்புகிறார்!

பகுத்தறிவுச் சிந்தனை, சமூகமாற்றம், அறிவியல் அணுகுமுறை, சுதந்திரமான சிந்தனை, தன்னம்பிக்கை ஆகியவற்றை வழங்கக் கூடியதாக கல்வி விளங்கிட வேண்டும். அந்தக் கல்வியை அனைவருக்கும் வழங்கும் வளாகங்களாய் பல்கலைக் கழகங்கள் விளங்கிட வேண்டும்.

அதற்கு மாறாக மாணவர்களிடம் சுயசிந்தனையற்ற, பகுத்தறிவுக்கு ஒவ்வாத, பிற்போக்கு சிந்தனையை விதைக்கின்ற, மூடத்தனத்தை வளர்க்கின்ற, அடிமை தனத்தை நிரந்தரபடுத்திட நினைக்கும் பாசிச ஆட்சி புரியும் பிரதமர் மோடிக்கு பல்கலைக் கழகங்கள் துணைப் போவதா? வேதனையிலும் வேதனை...!

தன்னை இழக்கும் நேரத்திலும் தன் எஜமானருக்கு விசுவாசம் காட்ட விரும்புகிறது பல்கலைக் கழக மானியக்குழு.

பல்கலைக் கழகங்களில் பிரதமர் மோடியின் உருவம் கொண்ட செல்ஃபி பாயிண்ட்களை அமைக்க உத்தரவிட்டிருக்கும் பல்கலைக் கழக மானியக் குழுவின் அறிக்கையை திரும்பப் பெறாவிட்டால், கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் ஆணையேற்று தி.மு.க. மாணவர் அணி தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கல்லூரி வளாகத்திலும் மாபெரும் கண்டனப் போராட்டத்தை நடத்தும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு - அவ்வறிக்கையில் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. குறிப்பிட்டுள்ளார்.

மிக்ஜாம்புயல் : ஈரோடு மாவட்டத்திலிருந்து

# சென்னை மக்களுக்காக நிவாரணப் பொருட்கள்!

## மாவட்ட ஆட்சியர் அனுப்பி வைத்தார்!

ஈரோடு, டிச. 11 -

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் 06.12.2023 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா , மாவட்ட நிர்வாகம் மற்றும் தொண்டு நிறுவனங்கள் சார்பில் மிக்ஜாம் புயலினால் பாதிக்கப்பட்டுள்ள சென்னை பொது மக்களுக்கு இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டமாக அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய வாகனத்தினை அனுப்பி வைத்தார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் மிக்ஜாம் புயலினால் பாதிக்கப்பட்டுள்ள சென்னை மாவட்ட பொதுமக்களுக்கு ஈரோடு மாவட்ட நிர்வாகம் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் சார்பில் 1680 மில்கா பிரட் பாக்கெட்கள், 5280 குடிநீர் பாட்டில்கள், 540 பிஸ்கட் பாக்கெட்கள், 3,000 ரக்ஸ் பாக்கெட்கள், 2130 போர்வைகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய வாகனத்தினை முதல் கட்டமாக அனுப்பி வைத்தார்.

அதன் தொடர்ச்சியாக, இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டமாக, 9362 குடிநீர் பாட்டில்கள், 40668 பிஸ்கட் பாக்கெட்கள், 1195 போர்வைகள், 5345 பிரட் பாக்கெட்கள், 300 கோதுமை மாவு பாக்கெட்கள், 2710 எண்ணிக்கையிலான ஆயில் மற்றும் நூடுல்ஸ் பாக்கெட்டுகள், 200 பால் பவுடர் பாக்கெட்டுகள், 558 அரிசி பண்டல்கள், 180 மெழுகவர்த்தி பாக்கெட், 2400 தீப் பெட்டிகள், 2400 குளியல் சோப்பு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய வாகனத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் அனுப்பி வைத்தார்.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் (பொ) திருமதி. வே. லதா, மாவட்ட வன அலுவலர்கள் வெங்கடேஷ் பிரபு, (ஈரோடு சரகம்), சுதாகர் (ஆசனூர் சரகம்), உணவு பாதுகாப்பு அலுவலர் தங்கவிக்னேஷ் ஆகியோர் பங்கேற்றனர்.



ஈரோடு மாவட்டம் அந்தியூர் சட்டமன்றத் தொகுதி பர்கூர் மலை கிராமம் தாமரைக்கரையில் இந்த ஆண்டு பட்டா வழங்கப்பட்ட 6 பழங்குடியின பயனாளிகளுக்கு 6 மாதங்களாகியும் நில அளவீடு செய்யாமல் உள்ளது என்று பயனாளிகள் அனைவரும் அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலத்திடம் தெரிவித்ததையடுத்து மலைவாழ் மக்களுடன் அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம் தாலுகா அலுவலகத்திற்கு நேரில் சென்று தாசில்தார் பெரியசாமியிடம் கோரிக்கை மனுக்களை வழங்கி உடனடியாக நில அளவையாளர் மூலம் நிலத்தை அளவீடு செய்ய வேண்டும் என கூறினார். தாசில்தார் நில அளவீடு செய்ய அளவையாளர்களுக்கு உத்தரவிட்டார். பழங்குடியின மக்கள் தங்கள் பிரச்சினைக்குத் தீர்வு காண தாலுகா அலுவலகத்திற்கு அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம் வந்ததற்கு நன்றி தெரிவித்தனர்.

## சிவகங்கை மாவட்டத்திலிருந்து சென்னைக்கு நிவாரணப் பொருட்கள்!

சிவகங்கை, டிச. 11 -

சென்னையில் ஏற்பட்ட பெரும் புயல் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிவகங்கை மாவட்டத்திலிருந்து நிவாரணப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

திருப்பத்தூர் ஒன்றிய குழு தலைவர் எஸ்.சண்முக வடிவேல் ஏற்பாட்டின் பேரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரிசி, பருப்பு. மளிகைப்பொருட்கள், எண்ணெய்வகைகள், குடிநீர் பாட்டில்கள், பிஸ்கட், வேஷ்டி, சேலை, போர்வை, போன்ற பொருட்கள் அனுப்பிவைக்கப்பட்டன.

கல்லல் ஒன்றிய குழு தலைவர்திருமதி சொர்ணம் அசோகன் ஏற்பாட்டின் பேரில் அரிசி, பருப்பு ,வேஷ்டி, சேலை, பிஸ்கட் பாக்கெட்டுகள், குடி தண்ணீர் பாட்டில், போர்வைகள் அனுப்பிவைக்கப்பட்டது. பொதுக்குழு உறுப்பி னர் கரு.அசோகன், ஆணையாளர்கள் கலந்து கொண்டார்கள்.

வட்டாட்சியர் ராஜா ஏற்பாட்டின் பேரில் அரிசி, எண்ணெய்வகைகள், குடிநீர் பாட்டில்கள், பிஸ்கட் வேஷ்டி, சேலைபோர்வைகள் போன்ற பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டது.

காளையார் கோவில். வட்டாட்சியர் ராஜரத்தினம் ஏற்பாட்டின் பேரில் அரிசி, மளிகைப் பொருட்கள், வேஷ்டி, சேலைகள், போர்வைகள், பிஸ்கட் பாக்கெட்டுகள் குடிநீர் பாட்டில்கள் அனுப்பி வைக்கப்பட்டது. மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் இருந்து வேன்கள் மூலம் சென்னைக்கு நிவாரண உதவிப் பொருட்கள் அனுப்பிவைக்கப்பட்டது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### காவனூர் மா.தாமோதரன்

### டிசம்பர் 11 (2015)



**பேரறிஞர் அண்ணாவின் பேச்சால் ஈர்க்கப்பட்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கிளைச் செயலாளர், சித்தாமூர் ஒன்றியச் செயலாளர், மாவட்ட அணிகளின் அமைப்பாளராகப் பணியாற்றியவர்.**

**சூணாம்பேடு ஊராட்சி மன்றத் தலைவராக இரண்டு முறையும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத் தலைவராகவும் பணியாற்றி மக்களின் அன்பைப் பெற்றவர்.**

**கழகம் அறிவித்த இந்தி எதிர்ப்பு, சட்ட நகல் எரிப்பு, விலைவாசி உயர்வு, இலங்கைத் தமிழர் ஆதரவு உள்ளிட்ட பல போராட்டங்களில் பங்கேற்று ஏறத்தாழ பத்து முறை சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ்.ஆர்.எஸ். ராஜாக்கனி

### டிசம்பர் 11 (2009)



**முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து விருதுநகர் நகரக் கழகச் செயலாளராகப் பணியாற்றியவர்.**

**விருதுநகர் கூட்டுறவு வங்கித் தலைவராகப் பணியாற்றியவர்.**

**1986ல் மொழிப்போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று ஏறத்தாழ இருபத்தோரு முறை சிறை சென்றவர்.**

**"சிறைக்கும், சித்திரவதைக்கும் அஞ்சாத என் தம்பி ராஜாக்கனி" என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஜனவரி 19 ஆம் தேதி முதல் 31 ஆம் தேதி வரை நடக்க இருக்கும் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டி தொடர்பாக அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார். தேசிய அளவிலும் பன்னாட்டு அளவிலும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை வெற்றிகரமாக நடத்தியதைப் போல கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டியும் சிறந்த முறையில் நடத்தப்படும் என்கிற நம்பிக்கையை அவர் வெளிப்படுத்தினார்.



எழும்பூர் தொகுதியில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 1,500 பெட்ஷீட், 1,500 புடவை, 1,500 கைலி, 1,500 பிரெட் பாக்கெட், 5 கிலோ கொண்ட 1,500 அரிசிப் பை உள்ளிட்ட நிவாரண உதவிகள் இ.பரந்தாமன், எம்.எல்.ஏ., ஏற்பாட்டில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் ஆகியோர் வழங்கினார்கள். இதில் ஜெ.விஜயகுமார், ஆர்.புருஷோத்தமன், ந.கலையரசன், கமலக்கண்ணன், மா.காந்தி, வெ.மருதன், புரசை எஸ்.குமார், ஆரோக்கியம், கே.சீனிவாசன், வெற்றிவேல், ஜே.சிலம்பரசன், பு.சதிஷ்குமார், எல்.சுகுமாரன், இளஞ்செழியன், யு.விஜயபோஸ், ரமேஷ், கி.புஷ்பராஜ், பிரம்மதேவன், கவிதா, சத்யகலா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



சென்னை வள்ளுவர்கோட்டத்தில் நடந்த நிகழ்ச்சியில் ஆயிரம்விளக்கு தொகுதியில் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தயாநிதி மாறன் எம்.பி. ஆகியோர் வழங்கினார்கள். உடன் நா.எழிலன் எம்.எல்.ஏ. உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.

## ‘நீட் விலக்கு நம் இலக்கு’ கையெழுத்து இயக்கம்

## இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னெடுப்பில்

# 50 நாள்களில் 72 லட்சம் பேர் கையெழுத்து!

தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் முன்னெடுப்பில் தொடங்கப்பட்ட ‘நீட் விலக்கு நம் இலக்கு’ கையெழுத்து இயக்கத்தின் மூலம் 50 நாள்களில் 72 லட்சம் பேர் நீட் தேர்வுக்கு எதிரான தங்கள் உணர்வை கையெழுத்தாக பதிவு செய்துள்ளனர்.

‘ஏழை, எளிய மாணவர்களின் மருத்துவக் கல்விக் கனவைச் சிதைக்கும் நீட் தேர்வில் இருந்து விலக்கு அளிக்க வேண்டும்’ என்ற கோரிக்கை, கட்சிகளைக் கடந்து, தமிழ்நாட்டு மக்களின் ஒட்டுமொத்த குரலாக ஒலித்துக்கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டில் மட்டும் 29 மாணவர்கள் தற்கொலை செய்துகொள்ளக் காரணமாக இருந்த நீட் தேர்வில் இருந்து விலக்கு அளிக்க வகைசெய்யும் மசோதா, தமிழ்நாட்டு சட்டப் பேரவையில் இரண்டாவது முறையாகவும் ஒருமனதாக கடந்த பிப்ரவரி 8ஆம் தேதி நிறைவேற்றப்பட்டது. இந்த மசோதா, குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக, ஆளுநர் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது.

நீட் விலக்கு மசோதாவுக்கு குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற பல வகைகளிலும் தமிழ்நாடு அரசும் தி.மு.கழகமும் முயற்சி எடுத்து வருகின்றன. நீட் விலக்கு மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்கக் கோரி, 2023 ஆகஸ்ட் 20ஆம் தேதி, தமிழ்நாடு தழுவிய அளவில் தி.மு.க. இளைஞர் அணி, மருத்துவ அணி, மாணவர் அணி ஆகியவற்றின் சார்பில், உண்ணாநிலை அறப் போராட்டம் நடத்தப்பட்டது.

சென்னை வள்ளுவர் கோட்டம் அருகே இளைஞர் அணி மாநிலச் செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இந்த உண்ணாநிலை அறப் போராட்டத்தைத் தலைமையேற்று தொடங்கி வைத்தார். தமிழ்நாடு முழுவதும் லட்சக்கணக்கான மக்களின் பங்கேற்பில், இந்த அறப் போராட்டம் மாபெரும் வெற்றியடைந்தது.

இதன் தொடர்ச்சியாக, நீட் விலக்கு மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்க, குடியரசுத் தலைவரை வலியுறுத்தி, தமிழ்நாடு முழுவதும் 50 இலட்சம் பேரிடம் கையெழுத்து பெற முடிவு செய்யப்பட்டது. அதன்படி, 50 நாட்களில் 50 இலட்சம் கையெழுத்து என்ற இலக்குடன், ‘நீட் விலக்கு நம் இலக்கு’ கையெழுத்து இயக்கத்தை, தி.மு.க இளைஞர் அணி, மருத்துவ அணி, மாணவர் அணி இணைந்து, அக்டோபர் 21ஆம் தேதி தொடங்கியது.

Banneet.in என்ற இணையதளப் பக்கம் வாயிலாகவும், அஞ்சல் அட்டைகள் மூலமாகவும் கையெழுத்து பெறும் வகையில், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் தலைமையிலான குழு, அதற்கான விரிவான ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், முதல் கையெழுத்திட்டு, இந்த கையெழுத்து இயக்கத்தைத் தொடங்கி வைத்தார். கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற கையெழுத்து இயக்க நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்.

பொதுமக்கள், வணிகப் பெருமக்கள், அரசியல் பிரமுகர்கள், சமூக ஆர்வலர்கள், மாணவர்கள், மருத்துவர்கள், ஆசிரியர்கள் என அனைத்துத் தரப்பினரும் தன்னெழுச்சியாக `நீட் விலக்கு நம் இலக்கு’

கையெழுத்து இயக்கத்தில் பங்கேற்று கையெழுத்திட்டு ஆதரவளித்தனர்.

கையெழுத்து இயக்கம் தொடங்கப்பட்டு, இன்றுடன் 50 நாட்கள் நிறைவடையும் நிலையில், நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 50 இலட்சம் என்பதையும் தாண்டி, இன்று காலை வரை 72 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் கையெழுத்திட்டு, நீட் விலக்குக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். இதில் இணையம் முலம் 56 இலட்சத்துக்கு மேற்பட்டோரும், தபால் அட்டைகள் மூலம் 16 இலட்சம் பேரும் கையெழுத்திட்டுள்ளனர்.

நீட் விலக்கு மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்க, குடியரசுத் தலைவரை வலியுறுத்தும் வகையில் பெறப்பட்ட கையெழுத்துகளை, சேலத்தில் இம்மாதம் 24ஆம் தேதி நடைபெறும் இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாட்டின்போது மாண்புமிகு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் ஒப்படைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதுவரை ‘நீட் விலக்கு நம் இலக்கு’ கையெழுத்து இயக்கம் தொடர்ந்து நடைபெறும்.

ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களின் மனங்களைப் பிரதிபலிக்கும் வகையில் பெறப்பட்டுள்ள இக்கையெழுத்துகள், பின்னர் உரிய முறையில் குடியரசுத் தலைவரிடம் சமர்ப்பிக்கப்படும்.

**தி.மு.க. இளைஞர் அணி**

**அன்பகம், சென்னை– 18.**

# பொருள் கொண்டோர் அருள் கூர்க!

## கவிப்பேரரசு வைரமுத்து உருக்கம்!

‘தண்ணீர் தண்ணீர்
எங்கணும் தண்ணீர்
குடிக்கத்தான் இல்லை ஒரு துளி'
எனும் ஆங்கிலக் கவிதை
நினைவின் இடுக்கில் கசிகிறது

வீட்டுக்குத் தண்ணீர் இல்லை
என்பது சிறுதுயரம்
வீட்டுக்குள்ளேயே தண்ணீர்
என்பது பெருந்துயரம்

விடியும் வடியும் என்று
காத்திருந்த
பெருமக்களின் துயரத்தில்
பாதிக்கப்படாத நானும்
பங்கேற்கிறேன்

என் கடமையின் அடையாளமாக
முதலமைச்சரின்
பொது நிவாரண நிதிக்கு
ஒரு லட்ச ரூபாய் வழங்குகிறேன்

பொருள்கொண்டோர்
அருள்கூர்க



சக மனிதனின் துயரம்
நம் துயரம்

இடர் தொடராதிருக்க
இனியொரு விதிசெய்வோம்;
அதை எந்தநாளும் காப்போம்

– கவிப்பேரரசு
**வைரமுத்து**





புதுக்கோட்டை தெற்கு மாவட்டம், தி.மு.க. மாவட்ட தொண்டர் அணி சார்பில் அறந்தாங்கியில் சட்டத்துறை அமைச்சர், புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ரகுபதி தலைமையில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கருத்தரங்கத்தில் கலைஞரின் தொலைநோக்குப் பார்வை என்ற தலைப்பில் மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர், கழக கொள்கை பரப்புச் செயலாளர் திருச்சி என்.சிவா கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வுகளில் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், கழக தொண்டர் அணி துணைச் செயலாளர் சுப.சரவணன். மாவட்ட துணைச் செயலாளர்கள் ஞான.இளங்கோவன், ஸ்ரீதேவி அண்ணாதுரை, க.அடைக்கலம், மாவட்டப் பொருளாளர் ஜெ.அபுதாகீர், அறந்தாங்கி நகரக் கழகச் செயலாளர் க.ராஜேந்திரன், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் உதயம் சண்முகம், அறந்தாங்கி நகராட்சி தலைவர் இரா.ஆனந்த், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் மு.கருணாகரன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

# இந்தியாவில் இருந்து வெளிநாட்டு நிறுவனங்கள் வெளியேறுவது ஏன்?

## மக்களவையில் கனிமொழி கருணாநிதி கேள்வி!

புதுடெல்லி, டிச.11-

இந்தியாவில் இருந்து வெளிநாட்டு நிறுவனங்கள் வெளியேறுவது ஏன்? அதை தடுக்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன என்று மக்களவையில் கனிமொழி கருணாநிதி எம்.பி. கேள்வி எழுப்பினார்.



மக்களவையில் தி.மு.க. எம்பி கனிமொழி கருணாநிதி எழுப்பிய கேள்வியில், “இந்தியா வில் இருந்து வெளிநாட்டு நிறுவனங்கள் வெளியேறுவது அதிகரித்திருப்பது ஏன். 2018ம் ஆண்டு 102 வெளிநாட்டு நிறுவனங்கள் இந்தியாவில் தொடங்கப்பட்டன. ஆனால் அதே வருடத்தில் 111 வெளிநாட்டு நிறுவனங்கள் இந்தியாவில் தங்கள் செயல்பாடுகளை நிறுத்தி விட்டனர்.

குறிப்பாக கோவிட் தொற்றுக்குப் பிறகு பல வெளிநாட்டு நிறுவனங்கள் சீனாவுக்குச் செல்ல தயங்குகிற நிலையில் கூட, நாம் அவர்களுக்கு ஏற்ற வணிகச் சூழலை அமைத்துத் தந்துள்ளோம். அதனால் இதுகுறித்து எடுத்த நடவடிக்கை என்ன” என கேட்டிருந்தார்.

இதற்கு பதிலளித்த நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், “வெளிநாட்டு வணிக நிறுவனங்கள் இந்தியாவில் தங்கள் கிளை அலுவலகத்தையோ, திட்ட அலுவலகத்தையோ, தொடர்பு அலுவலகத்தையோ, அல்லது தங்களின் பிரதிநிதிகள் அலுவலகத்தையோ தொடங்கலாம்.

இதற்கு பாரத ரிசர்வ் வங்கியின் விதிமுறைகள் மற்றும் அரசின் பிற துறைகளின் விதிமுறைகளை அவர்கள் பூர்த்தி செய்ய வேண்டும். இது போன்ற வெளிநாட்டு நிறுவனங்களின் அலுவலகங்கள் இந்தியாவில் தொடங்கப்பட்ட 30 நாட்களுக்குள் அந்த நிறுவனங்கள் கம்பெனி பதிவாளரிடம் (டெல்லி, அரியானா) கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 380ன் கீழ் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்து பதிவுச் சான்றிதழ் பெற வேண்டும் என எழுத்துப் பூர்வமாக தெரிவித்தார்.

# திராவிட மாடல் அரசு 46

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.**







## ஆக்கம் தரும் ஊக்கம்!

“எந்தவொரு அரசாக இருந்தாலும், ஏதாவது ஒரு குறிப்பிட்ட சில துறைகளில் மட்டும் அதிக கவனம் செலுத்தும். ஆனால், நம்முடைய திராவிட மாடல் அரசானது அனைத்துத் துறை களிலும் அதிக கவனம் செலுத்துவதன் மூலமாக அனைத்துத் துறைகளையும் ஒரு சேர வளர்த்துக் கொண்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக சில துறைகள் ஸ்டார் துறைகளாக வளர்ந்து வருகின்றன. அதில், விளையாட்டுத் துறையும் ஒன்று” என, நம் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் சமீபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் குறிப்பிட்டிருந்தார்.

விளையாட்டுத் துறை மட்டுமல்ல. விளையாட்டு வீரர்களையும் ‘ஸ்டார்’ ஆக உயர்த்துவதே நம் ‘திராவிட மாடல் அரசு’ கொண்டுள்ள இலக்கு.

அந்த இலக்கை அடைவது எப்படி? மாவட்டந்தோறும் விளையாட்டு அரங்கங்கள் ஏற்படுத்துவது, திறமையானவர்களைக் கண்டறிவது, பயிற்சியாளர்களை நியமிப்பது, உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது, விளையாட்டுக்கான உபகரணங்கள் வழங்குவது, தேச, சர்வதேச விளையாட்டுப் போட்டி தொடர்பான பயணச் செலவுகளை ஏற்றுக்கொள்வது, வீரர்களுக்குக் காயம் ஏற்பட்டால், அவர்களின் சிகிச்சைக்கு உதவுவது என 360 டிகிரியில் உழைத்து வருகிறது, தமிழ்நாடு விளையாட்டுத் துறை.

இவற்றுடன், குடும்பத்தில் நிலவும் பொருளாதாரச் சூழல்களால் விளையாட்டுப் போட்டிகளில் சாதனை படைக்கும் வீரர்களின் உற்சாகம் குலைந்து விடாமல் இருக்க, அவர்களுக்கு ‘உயரிய ஊக்கத்தொகை’யையும் வழங்கி வருகிறது, நம் ‘திராவிட மாடல் அரசு’.

### வீரர்களை மதிக்காத முந்தைய ஆட்சி

பொதுவாக, புதிதாகப் பொறுப்பேற்கும் ஓர் அரசு தனது ஆட்சிக் காலத்தில் சிறந்து விளங்கும் விளையாட்டு வீரர்களுக்கு மரியாதை செய்யும். ஆனால், நம் தி.மு.கழக அரசு, முந்தைய ஆட்சியில் சாதனை படைத்த வீரர்களையும் கௌரவப்படுத்தியது.

2022-ஆம் ஆண்டு செப்டம்பர் 12 அன்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில், கடந்த 2019-2020-ஆம் ஆண்டு நடைபெற்ற 65-வது தேசிய பள்ளிகள் விளையாட்டுக் கூட்டமைப்பு விளையாட்டுப் போட்டிகளில் 14 வயது, 17 வயது மற்றும் 19 வயதுக்குட்பட்ட வீரர்கள் என 3 பிரிவுகளில் பதக்கங்கள் வென்ற 659 மாணவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையாக 7 கோடியே 3 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகள் வழங்கப்பட்டன.

மேலும், அதே ஆண்டு நடைபெற்ற தேசிய அளவிலான சப்-ஜூனியர், ஜூனியர், இளையோர் மற்றும் சீனியர் என பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டைச் சார்ந்த 291 விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கத் தொகையாக 5 கோடியே 93 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளும் வழங்கப் பட்டன.

2019-ஆம் ஆண்டு அக்டோபர் 23 முதல் 27 வரை தென்கொரியாவில் நடைபெற்ற ‘ஆசிய ரோயிங் சாம்பியன்ஷிப்’ போட்டிகளில் வெண்கலம் வென்று லட்சுமணன் ரோஹித் மரடப்பாவுக்கு 5 இலட்சம் ரூபாய் ஊக்கத் தொகை வழங்கப்பட்டது.

தவிர, 2021 மார்ச் 19 முதல் 21 வரை, உத்தரகாண்ட் மாநிலத்தில் நடைபெற்ற பெண்களுக்கான 31-வது தேசிய அளவிலான சீனியர் ஃபென்சிங் (வாள் சண்டை) சாம்பியன்ஷிப் குழுப் போட்டிகளில் வெண்கலம் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த 4 வீராங்கனைகளுக்கு ஊக்கத் தொகையாக தலா ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

**என்ன போட்டி..**
**என்ன பதக்கம்..**
**எவ்வளவு உயரிய ஊக்கத் தொகை...**

- **ஒலிம்பிக் போட்டி**
  தங்கம் - ரூ.3 கோடி.
  வெள்ளி - ரூ.2 கோடி.
  வெண்கலம் - ரூ.1 கோடி.
- **ஆசிய விளையாட்டுப் போட்டி**
  தங்கம் - ரூ.50 இலட்சம்.
  வெள்ளி - ரூ.30 இலட்சம்.
  வெண்கலம் - ரூ.20 இலட்சம்.
- **காமன்வெல்த் போட்டி**
  தங்கம் - ரூ.50 இலட்சம்.
  வெள்ளி - ரூ.30 இலட்சம்.
  வெண்கலம் - ரூ.20 இலட்சம்.
- **பாராலிம்பிக் போட்டி**
  தங்கம் - ரூ.3 கோடி.
  வெள்ளி - ரூ.2 கோடி.
  வெண்கலம் - ரூ.1 கோடி.
- **பாரா ஆசிய போட்டி**
  தங்கம் - ரூ.50 இலட்சம்.
  வெள்ளி - ரூ.30 இலட்சம்.
  வெண்கலம் - ரூ.20 இலட்சம்.
- **காமன்வெல்த் (பாரா)**
  தங்கம் - ரூ.50 இலட்சம்.
  வெள்ளி - ரூ.30 இலட்சம்.
  வெண்கலம் - ரூ.20 இலட்சம்.

இவை மட்டுமல்ல. கடந்த 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் சதுரங்க விளையாட்டில் சர்வதேச மாஸ்டர் பட்டம் வென்ற ஆர்.பிரக்ஞானந்தா, ப.இனியன் ஆகியோருக்கு தலா 3 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. மேலும், 2017 மற்றும் 2020-ஆம் ஆண்டுகளில் சதுரங்க விளையாட்டில் பெண்கள் சர்வதேச மாஸ்டர் பட்டம் வென்ற ஸ்ரீஜா சேஷாத்ரி மற்றும் கே.பிரியங்கா ஆகியோருக்கு தலா 3 இலட்சம் ரூபாய் ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டது.

இவற்றுடன் கடந்த 2019-2020 காலகட்டத்தில், அகில இந்திய பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளில் வென்ற 144 விளையாட்டு வீரர்களுக்கு 2 கோடியே 13 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.

### மாற்றுத்திறனாளிகளை மறவோம்!

விளையாட்டுப் போட்டிகளில் விளையாடும் அனைவருமே வீரர்கள்தான். இயல்பான உடலமைப்பு கொண்ட எந்த வீரருக்கும் குறைந்தவர்கள் அல்ல மாற்றுத்திறனாளி வீரர்கள். அதனால்தான் எந்தப் பாகுபாடும் இல்லாமல் அவர்களுக்கும் ஊக்கத் தொகையை வாரி வழங்குகிறது ‘திராவிட மாடல் அரசு’.

2019-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஐக்கிய அரபு நாடு சார்ஜாவில் நடைபெற்ற உயரம் குறைந்த மாற்றுத்திறனாளிகளுக்கான உலக அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் 100, 200 மீட்டர் தடகளப் போட்டியில் 2 தங்கம் வென்ற ஆர்.பாலசுப்பிரமணியனுக்கு 10 இலட்சம் ரூபாயும், ஈட்டி எறிதலில் தங்கம் வென்ற ஏ.செல்வராஜூக்கு 5 இலட்சம் ரூபாயும், ‘குண்டு மற்றும் வட்டு எறிதலில்’ 2 வெண்கலம் வென்ற ஜி.விஜயசாரதிக்கு 4 இலட்சம் ரூபாயும், ஈட்டி மற்றும் வட்டு எறிதலில் 2 வெண்கலம் வென்ற கே.கணேசனுக்கு 4 இலட்சம் ரூபாயும், குண்டு எறிதலில் வெண்கலம் வென்ற எஸ்.மனோஜூக்கு 2 இலட்சம் ரூபாயும், இறகுப் பந்து ஒற்றையர் பிரிவில் வெள்ளி வென்ற எஸ்.சிவராஜனுக்கு 3 இலட்சம் ரூபாயும் ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டன.

### ஊக்கம் உயர... சாதனை உயரும்!

‘ஊக்கம் தர ஆள் இருந்தால், ஊக்கு விற்பவனும் தேக்கு விற்பான்’ என்பார்கள். இந்த ‘உயரிய ஊக்கத்தொகை’ என்பதன் பொருளே ஒருவருக்கு அளிக்கப்படும் ஊக்கத்தொகையால், அந்த வீரர் உந்தப் பெற்று, அடுத்தடுத்த போட்டிகளில் வெற்றிபெற்று, புதிய சாதனைகள் படைக்கவேண்டும் என்பதுதான்.

தேசிய போட்டிகள், ஆசிய போட்டிகள், காமன்வெல்த் போட்டிகள், உலகக் கோப்பைப் போட்டிகள், ஒலிம்பிக் போட்டிகள் என ஒவ்வொரு போட்டியிலும் வீரர்கள் பெறும் பதக்கங்களுக்கு ஏற்றவாறு ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. தேசிய போட்டிகளில் வென்ற ஒருவர் அடுத்து ஆசிய போட்டியிலோ அல்லது சர்வதேச போட்டியிலோ வென்றால், அப்போது அவருக்கு முன்பு வழங்கப்பட்ட ஊக்கத்தொகையை விட, அதிகமாக உயர்த்தி வழங்கப்படும். அது அந்த வீரரை அடுத்தடுத்த சாதனைகளை நோக்கிப் பயணிக்கச் செய்யும்.

இவ்வாறு சாதனைகள் புரிந்த வீரர்களுக்கு 2021-ஆம் ஆண்டு மே மாதம் ஆட்சிக்கு வந்தது முதல் இப்போது வரை 2,122 வீரர்களுக்கு 71 கோடியே 30 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் உயரிய ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. ‘திராவிட மாடல் அரசு’ ஆட்சியில் இந்த எண்ணிக்கை வரும் காலங்களில் நிச்சயம் அதிகரிக்கவே செய்யும்..!

...சாதனை தொடரும்

## விமர்சிப்போரின் நோக்கங்கள்!

அரசாங்கத்தின் மீது கோபம் கொண்டவர்கள் இருக்கலாம். ஆனால், விசாரித்த வரையில், படித்தவரையில் ஒன்று புரிகிறது. 2015-ஆம் ஆண்டு மழை வெள்ளம் போல இருமடங்கு தீவிரமானது, இப்போதைய இயற்கைப் பேரிடர். அப்போது இருந்தது அணுகவே இயலாத, பொறுப்பற்ற தலைமை. முன்னேற்பாடுகள் அற்ற நிர்வாகம். இப்போது உள்ளது, தரையில் கால்பாவி நிற்கிற, அணுக முடிகிற, உழைக்கிற அரசாங்கம்.

முன்னேற்பாடுகள் இருந்தன. களத்தில் இருந்தார்கள். கட்டமைப்பாக வெள்ள வடிகால் சிக்கலைத் தீர்க்கும் முயற்சியில் பாதி தூரம் கடந்திருக்கிறார்கள். எனவே, பாதி வெற்றி கிடைத்திருக்கிறது. மீட்புப் பணிகளில் போதாமை, குறைகள் இருந்திருக்கலாம். இருக்கத்தான் செய்யும். ஏனெனில், இயற்கை பெரிது. அரசு சிறிது. கிட்டத்தட்ட எல்லா காட்சி ஊடகங்களும் மக்கள் தவிப்பைக் காட்டின. அதை மட்டுமே காட்டின. கடந்தமுறை அரசு தவறிய போது, எதிர்க்கட்சியான தி.மு.க.வினர் மீட்பில் முழுவீச்சில் இறங்கினார்கள். இப்போது அரசின் போதாமைகளை நிரப்ப, எதிர்க்கட்சியான அ.தி.மு.க வந்ததா? களத்தில் இருப்பவர்களே சொல்ல வேண்டும். அவசரமாக பாராட்டுவோரின் அரசியல் புரிகிறவர்களுக்கு, அவசரமாக விமர்சிப்போரின் நோக்கங்களும் புரிய வேண்டும்.

**-பத்திரிகையாளர் அ.தா.பால சுப்ரமணியன் முகநூல் பதிவு**

## ஃப்ளாஷ்பேக் சுற்றுப்பயணமும் கொடியேற்றமும்!





ராஜேந்திரன்

1991-ஆம் ஆண்டு இன்றைய கழகத் தலைவரும் அன்றைய இளைஞர் அணிச் செயலாளருமான தலைவர் தளபதி அவர்கள் பிரச்சார சுற்றுப்பயணமாக, கோவைக்கு வருகை தந்தார். பாப்பநாயக்கன்பாளையம் கிளையில் ஆட்டோ ஸ்டேண்ட் அருகில் கழகக் கொடியேற்றி, சிறப்புரையாற்ற வருகை தந்தபோது அவரை நேரில் சந்தித்து என்னை அறிமுகம் செய்து கொண்டு, புகைப்படமும் எடுத்துக்கொண்டேன்.

**-ராஜேந்திரன், பாப்பநாயக்கன்பாளையம், கோயம்புத்தூர்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### கல்லக்குடிப் போராட்ட நிதி!

**1953-ஆம் ஆண்டு கல்லக்குடிப் போராட்ட நிதி திரட்டுவதற்காக ‘பரப்பிரமம்’ என்கிற நாடகத்தை எழுதினார் கலைஞர். அதில் கலைஞருடன், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ‘சேரன் செங்குட்டுவன்’ வேடத்தில் நடித்தார். கல்லக்குடிப் போராட்டத்தில் கலைஞர் சிறைக்குச் செல்லும் வரை அந்த நாடகம் நடைபெற்றது. ‘பராசக்தி’ திரைப்படத்தை விமர்சித்த கட்டுரையின் தலைப்பைக் கொண்டே அந்த நாடகத்தை எழுதினார் கலைஞர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 325




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131